# ஜனாதிபதி கிரியின் தெரிவு செல்லுபடியாகுமா?

Registered as a NewsPaper in Ceylon    விலை சதம் 15 ★ ★

**ஈழநாடு சந்தா**
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 87
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் சித்திரை 26 ரபி. அவ். 2 சனிக்கிழமை [9-5-70]

## 11-ம் திகதி தீர்ப்பு

புதுடில்லி, மே 8

திரு. வி. வி. கிரி இந்திய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகுமா? செல்லுபடியாகாதா?

இதற்கான தீர்ப்பை இந்திய சுப்ரீம் கோர்ட் இம்மாதம் 11-ம் திகதி வழங்கும்.

திரு. கிரி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யபபட்டது செல்லாது எனத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் நடந்தது. வாதப் பிரதிவாதங்கள் இன்றுடன் முடிவடைந்தன.

பதினொராம் திகதி மனு மீதான தீர்ப்பு வழங்கப்படுமென்று தலைமை நீதியரசர் திரு. சிக்ரி இன்று அறிவித்தார்.

இந்திய ஜதிபதி ஒருவர் முதல்தடவையாக கோர்ட்டில் ஆஜரானது இந்த விசாரணையின் போதுதான் என்பது தெரிந்ததே.

## 'இந்துப்பல்கலைக் கழகத்தை கிறிஸ்தவர், முஸ்லீம் மக்கள் எதிர்க்கவில்லை' —ஜி ஜி

கொழும்புத்துறை, வெள்ளி

'ஒரு பல்கலைக்கழகத்தைத் தற்போது புதிதாக அமைக்கக்கூடிய நிதிவசதியுடன் அரசாங்கம் இருக்கவில்லை. இதனால்தான் யாழ்ப்பாணத்திலுள்ள தர்மச்சொத்துக்களில் பல்கலைக்கழகத்தை நிறுவும்படி நான் வற்புறுத்தினேன். முன்னைய தமிழ் அறிஞர்களான இராமநாதன், மளவராயர், ஆறுமுகநாவலர் போன்றவர்களது சொத்துக்களை அரசாங்கம் பொறுப்பேற்று, அவற்றில் பல்கலைக்கழகத்தை நிறுவுவது இலகுவான காரியமில்லையா?'

இவ்வாறு குருநகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

வழக்கறிஞர் ஏ. அன்ரனி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசியதாவது:-

''தர்மச்சொத்துக்களில் இந்துப் பல்கலைக்கழகம் அமைப்பதை கிறிஸ்தவர்களோ அல்லது இஸ்லாமியர்களோ எதிர்க்கவில்லை என்பதை அவர்களது ஒற்றுமையில் இருந்து தெரிகிறது இந்துப் பல்கலைக்கழகம் நிறுவினால் அதில் எல்லா மதத்தினரும் கல்வி கற்கலாம் இதற்கு கிறிஸ்தவ முஸ்லீம் மதத் தலைவர்கள் ஆதரவு அளித்துள்ளனர்.''

1948-ம் ஆண்டு நான் மந்திரியாக இருந்தபோது, ஒரு மீன்பிடிக்கும் நேரத்தில் பத்து மீன்களைப் பிடிக்கக் கூடிய வசதியையும் கடலில் பிடித்தமீன்கள் கரைசேரும் வரை பழுதடையாமலிருக்க குளிர்சாதனம் பொருத்திய வள்ளங்களையும் ஐஸ் தொழிற்சாலைகளையும் ஸ்தாதாபிக்க வேண்டுமென வற்

(4-ம் பக்கம் பார்க்க

# கள்ளுக் கொட்டில்களை மாலை 6 மணியுடன் மூடிவிட வேண்டும்

## அசம்பாவிதங்களைத் தடுக்க பொலிஸ் அதிபர் சிபார்சு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் தேர்தலையொட்டி நடைபெறும் அசம்பாவிதங்களுக்கு கள் விற்பனையும் ஒரு காரணமாக இருப்பதால் மாலை 6 மணிக்குப் பின்னர் கள்ளுக்கொட்டில்களை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும், கலால் கமிஷனருக்கும் சிபார்சு செய்திருக்கிறார்.

வழக்கமாக இம்மாதத்தில் கள் கூடியளவு சீவப்படுவதால் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும், தேர்தல் சமயத்தில் குறைந்த விலையில் கள்ளு விற்கப்படுவதால் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு வரு[illegible] சனே தெரிவித்துள்ளார்.

நியமனத் தினத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணப்பகுதியில் கள்ளு விற்பனை அதிகரித்து [illegible] சாராய [illegible] போல் இருப்பதாகவும் பொலிசார் தெரிவிக்கனர்.

## 'ஆலயங்களில் புராணங்கள் ஒலிக்க வேண்டும்'

## ட்ராக்டர் - சைக்கிள் விபத்து; ஒருவர் பலி

### மற்றொருவர் கவலைக்கிடம்

யாழ்ப்பாணம், சனி

மணல் ஏற்றிச் சென்ற ட்ராய்க்டர் ஒன்று சைக்கிளில் சென்றவர்களுடன் மோதியதால் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றுமொருவர் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவிரயப்பட்டார்.

நேற்றுமுன்தினமிரவு 10-30 மணியளவில் நடந்த இச்சம்பவம் சம்பந்தமாக ட்ராக்டர் சாரதியான இருபாலையைச்சேர்ந்த அற்புதமூர்த்தி என்பவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு சைக்கிள்களில் இருவர் கைகோர்த்துக்கூடி[illegible]யில் தெரிவிக்கப்பட்டது. பாலகிருஷ்ணன் என்பவரே மரணமானவராவார்.

## பீட்டர் கெனமன் யாழ். வருகிறார்

மல்லாகம், வெள்ளி

கூட்டணி சார்பில் வடபகுதியில் போட்டியிடும் அபேட்சகர்களை ஆதரித்து நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் கலந்துகொண்டு உரைநிகழ்த்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பீட்டர் கெனமன், கொழும்பு தெற்கு முன்னாள் எம். பி. திரு பேர்னாட் சொய்ஸா ஆகியோர் இம்

## வைரவிழா

மல்லாகம், வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வைரவிழா அடுத்த மாதம் பிற்பகுதியில் கொண்டாடப்பட விருக்கின்றது. தொடர்ந்து ஏழு நாட்கள் இவ்விழாவையொட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற கல்லூரி அதிபர் திரு ரி ரி ஜெயரத்தினம் ஏற்பாடு செய்துவருகிறார். விஞ்ஞான பொருட்காட்சியும் விழாவில் இடம்பெறும் வைரவிழா ஞாபகார்த்தமாக புதிய இரண்டுமாடி விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றும் நிறுவப்படவிருக்கின்றது.

## பல்கலைக்கழக மாணவருக்கு கூடிய நிதி உதவி

### பிரதமர் டட்லி திடீர் உத்தரவு!

## அப்பலோ பயணம் பின்போடப்பட்டது

வாஷிங்டன், மே 8

இவ்வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெற விருந்த அப்பலோ 14ன் சந்திரப் பயணம் இருமாதம்வரை பின்போடப்பட்டுள்ளது.

அப்பலோ—13ன் தோல்வியை ஆராய்ந்த நிபுணர்களின் அறிக்கையை அடுத்தே இம்முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அப்பலோ 13ன் தோல்வியை சந்திரப் பயணத் தொடர்புள்ளவர்கள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

## இன்று

யாழ்ப்பாணம், சனி.

திருவண்ணை அரசடி விநாயகர் ஆலய வைரவமடை விழா இன்றுமாலை நடைபெறும். நாயன்மார்கட்டு யாழ் சைவசமய அபிவிருத்தி கழகத்தின் பஜனையும், அளவையூர் அருட்கவி திரு. சி. விநாசித்தம்பியின் பாலஞய்வந்த பழனி என்னும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாலையைச்சேர்ந்த அற புதமூர்த்தி என்பவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு சைக்கிள்களில் இருவர் கைகோர்த்துக்கூடி சென்று கொண்டிருந்ததாகவும் அப்போது இந்தவிபத்து ஏற்பட்டதாகவும் விசாரணை

கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பீட்டர் கெனமன், கொழும்பு தெற்கு முன்னாள் எம். பி. திரு பேர்னுட் சொய்ஸா ஆகியோர் இம்மாதம் 19-ம், 20-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

வதால் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும், தேர்தல் சமயத்தில் குறைந்த விலையில் கள்ளு விற்கப்படுவதால் அசம்பாவிதங்கள் ஏற்பட்டு வருவதாகவும் கள் விற்பனையை கட்டுப்படுத்துவதன் மூலம் அசம்பாவிதங்களைக் குறைக்கலாமென்றும் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

இம்மாதம் 20-ந் திகதி முதல் 29-ந் திகதி வரை வடபகுதியில் உள்ள கள்ளுக் கொட்டில்களை இரவு 6 மணியுடன் மூடிவிடும்படி பொலிஸ் அதிபர் ஆலோ

பின்னர் யாழ்ப்பாணப்பகுதியில் கள்ளு விற்பனை அதிகரித்துள்ளதாகவும், சாராய விற்பனை வழக்கம் போல் இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

வெசாக் தினத்தை யொட்டி நாடு முழுவதும் இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் சாராயத் தவறணை மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தேர்தலையொட்டி நான்கு தினங்கள் சாராயத்தவறணைகள் பூட்டப்படவிருக்கின்றன.

## 'ஆலயங்களில் புராணங்கள் ஒலிக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி

''அறமே உயிருக்குத்துணை அறமே வாழ்வின் வழிகாட்டியாகும். வாழ்நாள் முழுதும் தொல்லைகளுடன் போராடும் மக்கள் கந்த புராணப்படனம் படித்தும், படிக்கஉதவிசெய்தும், கேட்டும் அறத்தின் உயர்வைத் தெளியவேண்டும். ஆலயங்களில் புராணங்கள் ஒலிக்குமானுல் அது நாட்டுக்குச் சிறப்பாகும். பயன்படக் கூடியதும் அதுவே'' இவ்வாறு மீசாலை திலநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார்கோவிலில் இந்தபுராணபடனஆரம்பஅபிஷேகத்தை நடாத்திய பிரமஸ்ரீ எஸ். சிதம்பரநாதக் குருக்கள் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

பலர் சங்கற்பம் எடுத்துக் கொண்டபின் 'கந்தபுராணப்படனம்' தொடங்கப்பட்டது. மீசாலை பக்தி நெறிக் கழகச்செயலாளர் நன்றி பாராட்டிப்பேசினுர்.

## கூடிய நிதி உதவி
## பிரதமர் டட்லி திடீர் உத்தரவு!

கோட்டை, வெள்ளி

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிதிஉதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் உடனடிஉத்தரவொன்றைத் தொடர்ந்து இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

அறுபது ரூபாயிலிருந்து எழுபத்தைந்து ரூபாய், தொண்ணூறு ரூபாய், நூறு ரூபாய் வரை மாணவர்களது குடும்பநிலைக்கு ஏற்ப இந்த நிதிஉதவி வழங்கப்படும்.

அடுத்த மாதம் 1-ம் திகதியிலிருந்து அண்மையிலுள்ள மக்கள்வங்கியிலிருந்து இந்த நிதிஉதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதமர் கல்விஇலாகாவுக்கு இந்த உத்தரவை விதித்ததைத் தொடர்ந்து இந்த நிதிஉதவி உயர்த்தப்பட்டுள்ளது

அபிவிருத்தி கழகத்தின் பஜனையும், அளவையூர் அருட்கவி திரு. சி. விநாசித்தம்பியின் பாலகுமய்வந்த பழனி என்னும் கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

## பம்பாய்க்கருகில் 13 பேர் கொலை!

பம்பாய், மே 8

பம்பாய்க்கு அருகில் இரு கோஷ்டிக்கிடையே ஏற்பட்ட கலவரத்தில் 13 பேர் கொல்லப்பட்டும் 18 பேர் காயப்பட்டுமிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாருடைய கூப்பன்கள்?

தெல்லிப்பழைப் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீதியிலிருந்து கண்டு எடுக்கப்பட்ட ஐந்து கூப்பன் புத்தகங்களை மயிலிட்டிதெற்கைச்சேர்ந்த எஸ். தம்பிராசா என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## இவர்களுக்கு கால் ஏக்கர் கிடைக்கும்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு சின்னுற்றுங் காட்டில் உள்ளகாணிகளில் கால்ஏக்கர் வீதம் காணி இல்லாதோர்க்கு வழங்கும் பொருட்டு இம்மாதம் 15 ம் திகதி முல்லைத்தீவு காரியாதிகந்தோரில் அரசாங்க அதிபரால் காணிக் கச்சேரி ஒன்று நடாத்தப் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் அசம்பாவித சம்பவங்கள் குறைவு
## அமைதியை நிலை நாட்ட அபேட்சகருக்கு சில யோசனைகள்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்திலுள்ள தொகுதிகளில் நியமனனதித்திற்கு பின்னர்மிககுறைவாகவே அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. முல்லைத்தீவு, வவனியா, சாவகச்சேரி ஆகிய இடங்கன்ல் மிகச்சிறுசிறு சம்பவங்களே இடம்பெற்றுள்ளன. அண்மையில் நடைபெற்ற சிறுசம்பவங்கள்பற்றி விசாரணை நடைபெற்று வருகிறது.

வடமாகாணத்தில் உள்ள தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு பொலிசார் கீழ்க்காணும் ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளனர்.

O தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் எதிர்க்கட்சியினரைத் தாக்கிப் பேசுவதை தவிர்த்து கொள்வதன்மூலம் அசம்பாவிதங்கள் குறைவதற்கு வழிபிறக்கும்.

O அபேட்சகர்கள் தங்கள் ஆதரவாளர்கள் மதுபானம் அருந்தியபின் சச்சரவுகள் ஏற்படுவதை தவிர்த்து கொள்ளவேண்டிய தவசியம்

O ஒலி பெருக்கிகளில் கூட்டநிகழ்ச்சிகள் மட்டுமே அறிவிக்கவேண்டும். எதிர்க்கட்சி அபேட்சகரையோ' எதிர்க்கட்சியினரையோ தாக்கிப் பேசுவதுதவிர்க்கப் படவேண்டும். எதிர்க்கட்சியினரை தாக்கிப்பேசியதாக கூறப்பட்ட புகார் ஒன்று பற்றி பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர் இதுநிரூபிக்கப்பட்டால் ஒலிபெருக்கி லைசென்ஸ் உடனடியாக ரத்து செய்யப்படும்

O தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் எதிர்க்கட்சி அபேட்சகரைப்பற்றி தனிப் பட்டமுறையில் சொந்த வாழ்க்கையைப்பற்றி தாக்கிப் பேசுவது தவிர்க்கப் படவேண்டும். எதிரிக்கட்சியினரின் சொந்த வாழ்கையைப்பற்றி பேசுவதால் அசம்பாவிதங்கள் ஏற்பட வழி பிறக்கிறது.

O அபேட்சகருக்கு அவர் போட்டியிடும் தொகுதியில் எந்தப்பகுதிக்கும் செல்வதற்கு உரிமையுண்டு இந்த ஜனநாயக உரிமையை எவரும் தடைசெய்யக்கூடாது. எதிர்க்கட்சியினர் அபேட்சகரையோ அவரது ஆதரவாளர்களையோ தடுப்பார்களானுல் பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள்.

O அபேட்சகரின் தனிப்பட்ட விஷயம்பற்றி துண்டுப் பிரசுரங்கள் வெளியிடக்கூடாது. இதனுலும், அசம்பாவிதங்கள் ஏற்பட இடமுண்டு தனிப்பட்ட விஷயம் பற்றி துண்டுப் பிரசுரம் வெளியிடுவோர்மீது பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள்.

## வாக்களிப்புத் தினத்தில் பஸ் சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், சனி

தேர்தல் தினத்தன்று, நடக்கமுடியாத நிலையில் உள்ளவர்களையும், சுகவீன முற்றுவர்களையும் வாக்களிப்புநிலையத்திற்கு வாகனங்களில் கொண்டு செல்வதற்கு, முதலில் விண்ணப்பம் செய்து அனுமதி பெற வேண்டும் என்று தேர்தல் கந்தோர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் தினத்தன்று வாக்காளர் வசதிக்காக, இலங்கை போக்குவரத்து சபை, ஒவ்வொருபகுதிகளிலும் பஸ் சேவையை அதிகரித்துள்ளது. போக்குவரத்து வசதி குறைந்த இடத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கும், பஸ் சேவை விடப்படுமென்றும், இ போ ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் தினத்தன்று டாக்சி, தனிப்பட்ட பஸ், கார், வான், லொறி, மாட்டு வண்டில், குதிரைவண்டில், சயிக்கிள் உட்படஎந்த வாகனத்திலும், வாக்காளரைக் கொண்டுசெல்ல முடியாதென்றும், அப்படிக் கொண்டு செல்வது கண்டு பிடிக்கப்பட்டால், அந்த வாகனம் உடனடியாகப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுகவீன மானவர்களை, வாக்களிப்பு நிலையத்திற்கு சுமந்து கொண்டோ, அல்லது தூக்கிக் கொண்டோ செல்வதற்கு எவ் வித தடையும் இல்லையென்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தெஹிவளை இரட்டைக் கொலை

# இயந்திரத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

கொழும்பு, வெள்ளி

அண்மையில் தெஹிவளையில் நடைபெற்ற கொலைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் இயந்திரத் துப்பாக்கி தெஹிவளையில் வைத்து இன்று காலை கைப்பற்றப்பட்டது.

கொச்சிககடைப் பொலிஸ் நிலையத்தில் 3 வருடங்களுக்கு முன்னர் களவுபோன இயந்திரத் துப்பாக்கியாக இது இருக்கும் எனக் கருதப் படுகிறது.

செனட்டர் கே. எம். பி. ராஜரத்தினு சென்றுகொண்டிருந்த காரில் இருவர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதும், கொலைக்குப் பாவிக்கப்பட்ட துப்பாக்கியைக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டிருந்ததும் தெந்ததே விசாரணை தொடர்கிறது.

## கையடையாள ஆசாமி சிக்கினுன்!

கைப்பற்றப்பட்ட யந்திரத்துப்பாக்கியை அடுத்து ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் கையடையாளம் காரில் இருந்த கையடையாளத்துடன் ஒத்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை இருபத்தைந்து பேர் பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டனராம். அவர்களுள் பல பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்றும் இவர்கள் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

(சி.பி. ஏ.)

## 92 வயதில் 31வதுதிருமணம்!

மணிலா, மே 8

முப்பது மனைவியரின் 92-வயது ஆசைக்கணவர் மீண்டும் திருமணம் செய்யப்போகிருர். பிலிப்பைன்ஸிலுள்ள முஸ்லிம் 'வயோதிப இளைஞரே, இந்தச் சாதனையைச் செய்கிருர். இவருக்கு பல பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளுமே இருக்கிருர்கள்.

இவர் ஒரு நாளைக்கு ஆறுமுட்டைகளும், ஒரு கோப்பை தேநீருமே சாப்பிடுகிருர்.

# 'சே குவேரா' இயக்கம் மீது வழக்குத் தொடர சாட்சியம் இல்லை
## ஐ. ஜி. பி. கூறுகிருர்

கொழும்பு, வெள்ளி

சேகுவேரா இயக்கத்தினர் எனக் கூறப்படுவோர் மீது வழக்குத்தாக்கல் செய்வதற்கு போதிய சாட்சியங்கள் இன்னும் கிடைக்கவில்லையென்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரல் நேற்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

சேகுவேரா இயக்கத்தினரின் பயமுறுத்தல் உண்மையானதென்றும், இதுவரை நாடு முழுவதும் 25 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் மீதுகுற்றப்பத்திரிகை எப்பொழுதுதாக்கல் செய்யப்படும் எனக் கேட்டபோதுஎப்பிரிவின் மீது தாக்கல் செய்வது என்ற பிரச்னை இருப்பதாக அவர் கூறினுர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கைத் துப்பாக்கி மட்டும் கைப்பற்றப் பட்டதாகவும் கொழும்பு நகரில் பகிரங்கமாக விற்பனை செய்யப்படும் சேகுவேரா சம்பந்தப்பட்ட நூல்களை தடை செய்யும் எண்ணமில்லையென்றும் அவர் கூறினுர்.

(சி. பி.ஏ)

தமிழரின் உரிமை விஷயத்தில்

# ஆர். ஜி., பசநாயக்கா போன்றவராம் ஜி. ஜி.
## புன்னுலைக்கட்டுவனில் செனட்டர் திருச்செவவம்

மல்லாகம், வெள்ளி

''பதவி, சலுகை போன்ற அற்ப காரியங்களைக் கவனிக்காது தமிழரசுக்கட்சியினர் தமிழ் இனம் இந்தநாட்டில் தன்மானத்துடன் வாழக் கூடிய நிலையை ஏற்படுத்துவர். இதற்கு எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக, ஒரே கட்சியாக, தமிழரசுப் பிரதிநிதிகளைத் தெரிவுசெயுங்கள்.''

இவ்வாறு செனட்டர் திரு. எம். திருச்செல்வம் புன்னுலைக்கட்டுவன் வடக்கு பெற்ரேல் நிலைய முன்றலில் வியாழன் இரவுநடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் திரு. பூ. இளையதம்பி தலைமையில் இக்கூட்டம் கோப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளையை ஆதரித்து நடைபெற்றது.

திரு. திருச்செல்வம் மேலும் கூறியதாவது: 1948-ல் டி. எஸ். சேனநாயக்கா மந்திரி பதவி வழங்க முன்வராததினுல் தான் திரு செல்வநாயகம் காங்கிரஸிலிருந்து பிரிந்து தமிழரசுக்கட்சியை ஆரம்பித்து தமிழரைப் பிரிவினைப் படுத்தியதாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பொய்ப் பிரசாரம் செய்துவருகிருர். கியூ. சி. பட்டம் ஒன்று ஏற்கனவே எஸ். ஜே. வி.க்கு கிடைத்துவிட்ட பொருமை காரணமாகத்தான் உண்மையில் ஜி. ஜி. பொன்னம்பலம் யூ. என். பி. யுடன் சேர்ந்தார். திரு.

(4 ம் பக்கம் பார்க்க)

அடைவு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி நெல்லியடி கிளையில் 1-1-69க்கு முன்புஅடைவு வைத்து மீட்கப்படாது இருக்கும் நகைகள் 31-5-70 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் நெல்லியடிக் கிளையில் பகிரங்க ஏலத்தில்விற்கப்படும்.

முகாமையாளர்
யாழ், கூட்டுறவு மாகாண வங்கி
நெல்லியடிகிளை.
2251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை விளம்பரம்

கோப்பாய்க் கிராம சபைத் தலைவரால் சீல் வைத்த ரூபா 5000/-க்கு மேல் பதியப்பட்ட ஒப்பந்த காரரிடமிருந்து (1) பரமானந்த ஸ்ரேடியம் திருத்தல்வேலை (2) விளையாட்டு மைதான வீதி வேலை ஆதியனவற்றிற்கு கேள்விகள் 70-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கட்டுப்பணமாய் ரூபா 25/-ம் பத்திரப்பணமாய் ரூபா5/-ம் கட்டியதன் பேரில் கந்தோரால் வழங்கப்படும் படிவங்களிலேயே மனுச்செய்தல் வேண்டும். பத்திரங்கள் 15-5-70 நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

3. மறு விபரங்கள் யாவும் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

தி. பரமானந்தராசா,
தலைவர்,
கோப்பாய்க் கிராமசபை.
கோப்பாய்க் கிராமசபை
அலுவலகம்,
கோப்பாய்,
4-5-70. 2255

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வசாவிளான் அரசினர் மத்திய கல்லூரிக்கு அண்மையில் பலாலி, பிரதானவீதியில்பத்துப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: புன்னாலைக்கட்டுவன் வடக்கு, திரு. வல்லிபுரம் பொன்னம்பலம் என்பவருடன் நேரில் தொடர்பு கொள்ளவும். 2205

### தேவை

திருக்கேதீச்சர ஆலய திருப்பணி நிலையத்திற்கு ஐம்பது வயதிற்கு மேற்பட்ட சைவசமயத்தைச் சார்ந்த நல்லொழுக்கமுடைய ஓர் அன்பர் தேவை. தங்குவதற்கு இடவசதியும் மாதம் ரூபாய் ஒரு நூற்றைம்பது வேதனமும் கொடுக்கப்படும். அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது. விரும்புவோர் வைகாசி மாதம் (15) பதினைந்தாம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். கௌரவ செயலாளர், தி. ஆ. தி. சபை, திருக்கேதீச்சரம், 25-4-70. 2077

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கார்த்திகேசு அருளம்பலத்தின் மகள் பொன்னம்மா, அரசடிரோட், வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்:—
இல TR/46 வழக்காளி
எதிராக
1. வே. கந்தசாமியின் மனைவி தங்கம்மா
2. வேலுப்பிள்ளை கந்தசாமி இருவரும் அரசடி ரோட், வண்ணார் பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
— எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் TR/46 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுகட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஆண்டு யூன் மாதம் 1-ம் திகதி (1-6-70) திங்கட் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி. வண்ணார் பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்கு இறை, இராசாலக்குளக்கரையும், சிறுவேலியும்' வயற்பரப்பு 12ம் எல்லைகள்:- கிழக்கு:- சீனியர் சுப்பையாவின் ஆதனம், வடக்கு:-ரோட்டு, தெற்கு:- மொகமட் மீருன் கண்டு மரைக்கார் சுல்தான் அப்துல்காதர், மேற்கு:- தம்பிமரைக்காரின் விதவை அசன்கண்டு அம்மாவினதும் பங்குதாரர்களினதும்.

(ஒட்டுமடத்திலிருந்து கல்லுண்டாய்க்குப் போகும் பாதையில் உள்ளது)

ஆ.சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை
ஆணையாளரும்
மதிப்பாளரும்.
நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
30-4-70. 2254

## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரபோயா, போயா 2-30மணி
சிவாஜி -சாவித்திரி
நடித்த
### கைகொடுத்த தெய்வம்


# வேட்பாளர் அறிமுகப்

## உடுவில் தொகுதி



வி தர்மலிங்கம்
(தமிழ்அரசுக் கட்சி)

சகல கட்சியைச் சேர்ந்தவர்களையும் அன்புடன் அணைத்துப்பழகும் திரு. வி தருமலிங்கம் தமிழரசுக்கட்சியில் உறுதியான பற்றுடையவர்.

ஐம்பத்திரண்டு வயதுடைய திரு. தருமலிங்கம் வழக்கறிஞராவதற்காக சட்டக்கல்லூரியில் இறுதிஆண்டு வரை படித்தவர்.

1944-ம் ஆண்டில் உள்ளூர் அரசியலில் புகுந்த திரு. தருமலிங்கம் உடுவில் கிராம சபையில் பல ஆண்டுவரை தலைவராக விளங்கியவர். உடுவில் கிராம சபையின் ஒருபகுதி சுன்னுகம் பட்டின சபையாக மாறியபோது அதன் அங்கத்தவராகவும் இருந்துள்ளார். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் உபதலைவராகவும், சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முகாமையாளர்களுள் ஒருவராகவும் பல்லாண்டு பணி புரிந்தவர்.

இவர் கிராம சபைத் தலைவராகக் கடமையாற்றிய காலத்தில், அதாவது 7 ஆண்டு காலத்தில் கிராம சபை எல்லைக்குள் 8 1/4 மைலுக்கு அரசாங்க உதவிப் பணமின்றி மின்சார வசதி கிடைக்க வழிகண்டார். உடுவில் கிராம சபை சோலை வரி அறவிடாது அரசாங்க உதவியுடன் ஆக்கப்பணிகளைப் புரிய வழியமைத்தார்.

1956ம் ஆண்டு ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு பற்றி மல்லாகம் நீதிமன்றத்தில்கோடுகலையும்வரைசிறையிருந்திருக்கிருர். 6 மாதம் தொடர்ந்து தடுப்புக் காவலில் இருந்துள்ளார்.

தமிழரசு தபால் சேவை நடாத்தியதற்காக கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்

செய்யப்பட்டார். பின்தங்கிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி என்பது பற்றி ஆராய்ச்சிக் கட்டுரையொன்றையும் எழுதி, அது பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக அரசாங்கத்தின் உபகாரச் சம்பளத்துடன் வெளிநாடு சென்றவர். இவரது ஆராய்ச்சிபற்றியவிபரங்கள் 1969-ம் ஆண்டு லண்டன் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.


இவர் யாழ். மாவட்ட சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் காரியதரிசியாகவும், இலங்கைத் தமிழ் மாணவர் காங்கிரஸின் தலைவராகவும், மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கச் செயலாளராகவும். வடமாகாண ஆசிரியர் சங்கம், மானிப்பாய் வரியிறுப்போர் சங்கம், கயரோக நிவாரணசபை போன்ற பல துறைகளிலும் அங்கம்வகித்திருக்கிருர்.


தமிழரசுக் கட்சியின் ஆரம்பகாலந்தொட்டு நிர்வாக சபை அங்கத்தவராகவும், வாலிப முன்னணியின் உப தலைவராகவுமிருந்தவர். 1960ல் தமிழரசுக் கட்சியை விட்டுவிலகி 1960ம் ஆண்டில் நடந்த தேர்தலின் போது உடுவில் தொகுதியில் சுயேச்சையாளராகவும், 1965ல் நடந்த தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் உடுவில் தொகுதி அபேட்சகராகவும் போட்டியிட்டார். இவ்வாண்டும் உடுவில் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் கட்சி அபேட்சகராகத் தேர்தலில் போட்டியிடுகின்ருர்.

சிறுபான்மையினர் சுபீட்சமாக வாழ்வதற்குப் பொருளாதார முன்னேற்றம் அவசியம். அதற்காகப் பாடுபடுவதே தமது திட்டங்களில் முதன்மையானது என்று இவர் கூறுகிருர்

0 0 0

சி பொ வ மா க முதலியார்
(சுயேச்சை)





போட்டியிடுகிருர். இக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இக்கட்சியின் வளர்ச்சியில் பங்குகொண்டு உழைத்துவரும் இவர் மாணவனுக இருந்த காலத்திலேயே அரசியலில் மட்டுமல்லாது, தொழிலாளர் போராட்டங்களிலும் அக்கறை காட்டிவந்தார். 1941ம் ஆண்டு கொழும்பிலுள்ள தொழிலாளர்கள் வாழ்க்கைச் செலவுக்கான பஞ்சப்படிவேட்டு வேலைநிறுத்தம் செய்தபோது அதில் தீவிரமாக உழைத்தார்.

1922ம்ஆண்டில் பிறந்த இவர் ஆட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவது 3-வது தடவையாகும் 1960ம்ஆண்டிலும், 1965ம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் காங்கேசன்துறையில் போட்டியிட்டவர்.

இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்று தற்போது வழக்கறிஞராகப் பணிபுரிந்துவரும் திரு வி. காராளசிங்கம் இந்தியாவுக்குச் சென்று அங்கே மகாத்மா காந்தி தலைமையில் இயங்கிவந்த 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்தார் 1942ல் நடைபெற்ற நேரடிப் போராட்டத்திலும் பங்கு கொண்டார். 1943-1944ல் இந்திய விடுதலை இயக்கத்தை ஆதரித்து கல்கத்தாவிலிருந்து வெளியாகிய 'நிரந்தரப்புரட்சி' என்

பயின்றுவருகிருர், கல்லூரித் தமிழ்க்கலை மன்றத்தின் தலைவராகவுள்ளார், 1968-ம் ஆண்டு சேர் பி. இராமநாதன் ஞாபகார்த்த பரிசை பெற்றுச்சிறந்த பேச்சாளன் என்ற பெருமைபெற்றவர்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 9—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி. 9-30இசை நிகழ்ச்சி, 10-30 செய்திச் சுருக்கம்.

---

## குளிர் சாதனப் பெட்டி

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு கிராம வைத்தியசாலைக்கு குளிர் சாதனப் பெட்டி ஒன்று கிடைத்துள்ளது. இதன் மூலம் இதுவரை காலமும் நோயாளர்களுக்கு வேண்டிய மருந்து வகைகளைப் பாதுகாப்பதில் இருந்து வந்த பல்வகையான கஷ்

கூடைப்பந்தாட்டம்

## மட்டக்களப்பில்யாழ். கோஷ்டி தோல்வி

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை 'ஓல்கோல்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், மட்டக்களப்பு 'மைக்கலேட்ஸ்' விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கூடைப்பந்தாட்டப் போட்டியில் 'மைக்கலேட்ஸ்' வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்தில் இரு கோஷ்டியினரும் சமபலத்துடன் மோதிய போதிலும், இடைவேளைக்குச் சற்று முன்பாகவே 'ஓல்கோல்ஸ்' வீரர்கள் சோர்வடைந்து விட்டனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய 'மைக்கலேடஸ்' கோஷ்டியினர், மளமளவென புள்ளிகளைச் சேகரித்து விட்டனர். இடைவேளையின் போது இக் கோஷ்டியினர் 32—16 புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னணி வகித்தனர்.

இடைவேளையின் பின்பும் 'மைக்கலேட்ஸ்' கோஷ்டியினரின் விளையாட்டில் மிகவும சுறுசுறுப்புக் காணப்பட்டது. இக் கோஷ்டியினர் இடைவேளையின்பினமேலும் 26 புள்ளிகளைக் கூடுதலாகப் பெற்றனர். 'ஓல்கோல்ஸ்' கோஷ்டியினர் ஆக 14 புள்ளிகளையே கூடுதலாகப் பெற்றனர்.

ஆட்டமுடிவில் 'மைக்கலேட்ஸ்'கோஷ்டியினர் 58—30 புள்ளிகள் வித்தியாசத்தில் 'ஓல்கோல்ஸ்' கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

மட்டக்களப்பு சென். மைக்கல்ஸ் கல்லூரியின், கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. அன்டன் நடராசாவும், திரு. அல்கம் அவுட்ஸ்கோனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். தே. நி.)

---

தாச்சிப் போட்டியில்

## ஹாலிவூட் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

சண்டிருப்பாய் ஹாலிவூட் விளையாட்டுக் கழகத்தின் 10-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு நடைபெற்ற தாச்சிப் போட்டியில் சண்டிருப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் சண்டிருப்பாய் ஹாலிவூட் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இறுதியில் ஹாலிவூட் விளையாட்டுக் கழகம் 11—4 புள்ளிகளால் உதயசூரியன் கோஷ்டியினரைத் தோற்கடித்து, சுந்தரமூர்த்தியின் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

இப் போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. வ. கதிரவேலு கடமைபுரிந்தார் போட்டி முடிவில் திரு. வி. தர்மலிங்கம் பரிசு வழங்கிஞர். இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக சங்கானை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு எல் விஜயதிலகா கலந்து கொண்டார்

### புதிய நிர்வாகிகள்

சண்டிருப்பாய் ஹாலிவூட் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு. சு. சபாரத்தினம், காரியதரிசி: திரு: இ. யோகரத்தினம், தனதிகாரி: திரு. அ. நடராசா, விளையாட்டுப் பொறுப்பாளர்: திரு. சா. தர்மரத்தினம். இத்துடன் மூன்றுபேர் கொண்ட நிர்

---

## பத்திமா மாதா திருநாள்

யாழ்ப்பாணம், சனி

பண்டத்தரிப்பு பரிசுத்த பத்திமா மாதவின் ஆலயத் திருவிழா இம்மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன. ஆயத்த நவநாள் நோவினைகள் தினசரி மாலை நடைபெறுகின்றன.

12-ம் திகதி இரவு நடைபெறும் வைபவங்களுக்கு மேற்றிராணியார் தலைமை தாங்குவார். மறையுரைகள் ஜெபமாலைத் தியானம், பலிபூசை என்பன இடம் பெறும்.

பல சிறுவர்கள் புதுநன்மையும், உறுதிபூசுதலும் வழங்கப்படும். திருச்சொரூப ஊர்வலத்துடன் விழா முடிவடையும். (தே நி)


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ராஜா (யாழ்ப்பாணம் கடைசி வாரம் சிவாஜி ஜி.வரலக்ஷ்மி - நம்பியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா கடைசி வாரம் சிவாஜி
(யாழ்ப்பாணம் ஜி. வரலக்ஷ்மி - நம்பியார்
தினசரி 3 காட்சிகள் நடித்த

# ஹரிச்சந்திரா

ராணி 5வது வாரம்
(யாழ்ப்பாணம்) சிவாஜி, கே ஆர் விஜயா
தினசரி 3 காட்சிகள் நடித்த

# திருடன்

வின்ஸர் 5வது வாரம் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 87-வது தினம்

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




## சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த

# தில்லானா மோகனாம்பாள்

வெற்றிகரமான 2வது வாரம்!
கெப்பிட்டல் பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்

# நம் நாடு

(ஈஸ்ட்மென் கலர்


தொடர்ந்து தடுப்புக் காவலில் இருந்துள்ளார்.

தமிழரசு தபால் சேவை நடாத்தியதற்காக கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட ஐவருள் இவரும் ஒருவர்.

0

**திரு. ந. சிவநேசன்**
**(தமிழ்க்காங்கிரஸ்கட்சி)**



மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. அ நமசிவாயம் ஜே. பி, எம். பீ. ஈ, அவர்களுடைய சிரேஷ்ட புத்திரன் இவர். வயது நாற்பது. மலாயா - கோலாலம்பூரிலே ஆரம்ப வகுப்புத் தொடங்கி சிரேஷ்ட வகுப்பையும் படித்துமுடித்து பின்னர் இலங்கைக்குத் திரும்பியவர். கொழும்பிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் தொடர்ந்து படித்து, பட்டதாரியானார். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பலவருடங்களாக ஆசிரியராகக்கடமையாற்றினார்.

பின்னர் லண்டன் பரீட்சையில் பொருளாதார கலாநிதிப்பட்டம் பெற்றார். இப்பரீட்சையில் ஆசியாவிலேயே முதன்மையாகவும் தெரிவு


## ஸ்ரீ காலிங்கன்


இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

REGAL JAFFNA
Daily
4-45, 7 & 9-45 p.m.
Omar Sharif.
Francoise Dorleac
in
GENGHIS KHAN
(Technicolour)

## மனோகரா

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா, பிரி போயா
4 காட்சிகள்
ஜீவனாம்சம் லக்ஷ்மி-ராஜ்குமார்
நடித்த
கோவாவில்
சி. ஐ. டி. 999
(தமிழ்)


**முதலியார்**
**(சுயேச்சை)**



யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கிய தொழிலான சுருட்டுத்தொழிலைச் செய்கின்றவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர் திரு. முதலியார். 12000க்கு மேற்பட்ட சுருட்டுத் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இத்தேர்தலில் போட்டியிடுவதாக திரு. முதலியார் தெரிவிக்கின்றார்.

இவர்மானிப்பாய் பட்டினசபையின் அங்கத்தவருமாவர்.

அண்மையில் சுருட்டுத் தொழிலாளர் சம்பள உயர்ச்சி பெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களுள் ஒருவர். இலங்கை முழுவதிலும் சகல மக்களும் சாதி மத பேதமின்றி சர்வாதிகாரமில்லாத மக்கள் ஆட்சியின் கீழ் ஒற்றுமையாக வாழத்திட்டங்களை அமைத்தலே இவரின் செயலாக்கத்தில் முதன்மைபெற்றதென தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கின்றார்.

சுருட்டுத்தொழிலை ஒரு குடிசைக் கைத்தொழிலாகப் பிரகடனம்செய்ய அரசாங்கத்தைக்கேட்பதும் இவரது திட்டமாகும். நிதிமந்திரியையும் தொழில் மந்திரியையும் வருமானவரித் தலைவரையும் பேட்டிகண்ட சுருட்டுத் தொழிலாளர் கோஷ்டிக்கு இவர் தலைமை தாங்கிச் சென்றிருக்கிறார். இதன் பலனாக 1966-ம் ஆண்டு தொடக்கம் சுருட்டுத் தொழிலுக்கு விதிக்கப்பட்ட உற்பத்திவரி (Turn over Tax) 5 வீதத்திலிருந்து ஒரு வீதமாகக் குறைக்கப்பட்டது

இவ்வரியை முற்றாக நீக்கும் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்பதும் இவரது நோக்கமாகும். இவர் தேர்தல் மனுவைத் தாக்கல் செய்த அன்று இவரது ஆதரவாளர்களான சுருட்டுத் தொழிலாளர்கள் சுருட்டு மாலையை அணிவித்து தமது அன்பைக் காட்டியுள்ளனர்.

0 0 0

**திரு. வி. காராளசிங்கம்**
**(லங்கா சமசமாஜக்கட்சி**


தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வி. காராளசிங்கம் லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் உடுடுல் தொகுதியில்

நேரடிப் போராட்டத்திலும் பங்கு கொண்டார். 1943-1944ல் இந்திய விடுதலை இயக்கத்தை ஆதரித்து கல்கத்தாவிலிருந்து வெளியாகிய 'நிரந்தரப்புரட்சி' என்னும் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அப்போது ஆட்சி நடத்திய வெள்ளையர்கள் 1945ம் ஆண்டு இவரை பம்பாயில் வைத்து கைது செய்தனர். 1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபோது இவர் மீது பிறப்பிக்கப்பட்டிருந்த (வெளியேற்றி) உத்தரவு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது. மீண்டும் இவர் 1951ல் இந்தியா சென்று அரசியலில் ஈடுபட்டார்.

47 வயதுநிரம்பிய திரு. வி காராளசிங்கம் தற்போது மானிப்பாயில் வசித்து வருகிறார்

0 0 0

**கு விநோதன்**
**(சுயேச்சை)**



"கடந்த கால் நூற்றாண்டுகளாக நமது நாட்டில் உருவான கட்சி பேதங்கள் நமது இனத்துக்கு விமோசனம் பெற்றுத்தரவில்லை, கட்சி பேதங்கள் தலைமைப் போட்டியொன்றையே கருத்தாகக்கொண்டுள்ளன. தலைவர்கள் தாங்கள் இறுதிவரை தலைவர்களாகக்கருதப்பட வேண்டுமென்று நினைக்கின்றார்கள்.

நிகழ்காலமும் வருங்காலமும் மாணவர்கள் இளைஞர்களைப் பொறுத்தது. முதியவர்கள் இன்றைய பிரச்னை, உலகமாறுதல்களை உணர முடியாதவர்கள்,"

இவ்வாறு உணர்ச்சியும் துடிப்பும் மிகுந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருக்கும் செல்வன் விநோதன் ஒரு மாணவன்.

வாக்குரிமை பெற்ற பருவம் உடையவர். உடுவிற் தொகுதியில் போட்டியிட வந்துள்ளார்.

நமது நன்மை தீமைகளை நாமே நிர்ணயிப்போம் என்பது இவரது கருத்தாகும்.

1949-ம் ஆண்டு 11-ம் மாதம் 16-ந் திகதி பிறந்தவர் இவர்.

அருணோதயாக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி இவற்றில் கல்வி பயின்றவரான விநோதன் தற்போது ஜோயல் கல்லூரியில் கல்வி

கிடைத்துள்ளது. இதன் மூலம் இதுவரை காலமும் நோயாளர்களுக்கு வேண்டிய மருந்து வகைகளைப் பாதுகாப்பதில் இருந்து வந்த பல்வகையான கஷ்டம் நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

ரிசி: திரு. இ. யோகரத்தினம், தனாதிகாரி: திரு. அ. நடராசா, விளையாட்டுப் பொறுப்பாளர்: திரு. சா. தர்மரத்தினம். இத்துடன் மூன்றுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (தே. நி)


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க



Union Silks

எங்கும் கிடைக்கும்! இன்றே வாங்குங்கள்!!
நயமடைந்து மகிழுங்கள்!!!
புடவைகளில் நிகரற்றவை, முதன்மையானவை

பண்டத்தரிப்பு

# மின்தறி நெசவாலை உற்பத்திகள்

* அதிஅற்புத உடல் கரைச்சித்திரங்கள்
* கண்ணைப்பறிக்கும் அழகு வர்ணங்கள்
* நம்பமுடியாத அளவில் குறைந்த விலை
* கடும் பாவனைக்கான நீண்ட உறுதி

0 நைலோன் சரிகைச் சேலைகள்
0 நைலோன் சட்டைத் துணிகள்
0 நைலோன் சரிகை வேட்டி சால்வைகள்
0 ரெறெலீன் சேட்டிங் துணிகள்
0 பொலியெஸ்ரர் சூட்டிங் வகைகள்
0 சற்றின், ரவெற்ரு துணிகள்
0 வீட்டு அலங்கரிப்புக்கான துணிகள்

இலாபமல்ல எமது எண்ணம்
சேவையே எமது நோக்கம்
உற்பத்தியின் தரமே எமது கொள்கை

வர்த்தக நிலையங்களுக்கு விசேட கழிவு உண்டு.

# பண்டத்தரிப்பு கோவிற்பற்று

ப. நோ. கூ. ச. சமாசம்,
பண்டத்தரிப்பு.

2252


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்டுகளின் புதிய முகாம் ஒன்றை அமெரிக்கபடைகள் கண்டு பிடித்தன

## இழந்த கிராமமொன்றை கம்போடியர் கைப்பற்றினர்

### 'பெரட்பீக்' பகுதியில் தென் வியட்னுமியர் வாபஸ்

சைகோன், மே 8

கம்போடியாவில் புதிதாக வியட்காங்கியரின் ராணுவ முகாம் ஒன்றினை முன்னேறிக்கொண்டிருக்கும் அமெரிக்கபடையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். அமெரிகத் துருப்புகள் தேடிக்கொண்டிருந்த கம்யூனிஸ்டுகளின் தலைமை முகாம் இதுவாக இருக்கலாம் என்று அமெரிக்க ராணுவத்தலைமை கருதுகின்றது.

கம்போடியாவில் போரிட்டுக்கொண்டிருக்கும் அமெரிக்க-தென் வியட்னும்படைகளுக்கு ஆதரவா நேற்று மேற்கொண்டும் ஏராளமான படைகள் கம்போடியாவுக்குப் போயுள்ளன.

அதேசமயம் பெரட்பீக் என்ற பகுதியில் வியட்காங்கியரின் நிலைகள்மீது தாக்குதல்கள் நடத்தியபின் சுமார் 10 ஆயிரம் தென்வியட்னும் துருப்புகள் திரும்பிவந்துள்ளன.

தென் வியட்னும் எல்லையிலிருந்து சில மைல் தொலைவில் மிகப்பெரிய ராணுவமுகாமொன்றை அமெரிக்க-தென் வியட்னும் படைகள் கண்டுபிடித்திருக்கின்றன.

இது தென் வியட்னும் லாவோஸ் கம்போடியா ஆகிய எல்ல நாடுகள் மீதும் வியட்காங்கியர் நடத்திவரும் தாக்குதல்களுக்கு மூலஸ்தானமாக விளங்கும் தலைமை ராணுவமுகமாக இருக்கலாம் என்பது பற்றி உறுதியாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் ராணுவ நிலைகளில இதுவே மிகப்பெரியது என்று அமெரிக்கர் அறிவித்துள்ளனர். இந்தப்பகுதியில ஏராளமான சோவியத். சீன ஆயுதங்களும் குண்டுகளும் மருந்துவகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கம்போடியப் படைகள் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றியிருந்த கிராமமொன்றை மீண்டும் தம்வசமாக்கியிருப்பதாகச் செய்தி வந்திருக்கின்றது கம்போடிய தலைநகர் நாம்பெனுக்குச் சுமார் 30 மைல் தொலைவில் இக்கிராமம் இருக்கின்றதாம்.

இதேசமயம் கம்போடியாவில் அமெரிக்கா தலையிட்டதை ஆட்சேபித்து அமெரிக்க நகரங்கள் பலவற்றிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. பல மாநிலங்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் படுமோசமாக இடம்பெற்றுள்ளன. சனிக்கிழமையன்று வாஷிங்டனில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டமொன்றுக்குஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

நாட்டில் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கியிருப்பது குறித்து ஆராய்வதற்காக 50 மாகாணங்களின் கவர்னர்களை மகாநாடொன்றுக்கு வரும்படி அதிபர் நிக்ஸன் அழைத்திருக்கிறார்.

அமெரிக்கா, கம்போடியாவில் தலையிட்டிருப்பதை ஆட்சேபித்து வெனிசுலாவில் இடம்பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டமொன்றில் 3 பேர் பலியாகியிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன

## எம் ஜி. ஆர். தலைமையில் திருமணம்

சென்னை, மே. 8

ஒரேகுடும்பத்தில் உள்ள ஐந்து பேருக்கு ஒருநாளில் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்தை திரு எம். ஜி. இராமச்சந்திரன் நடாத்திவைத்தார்.

மாணிக்கம் என்பவரின் ஒரு மகன் 3மகள், அவருடைய அண்ணனுடைய மகள் ஆகியோருக்கும் ஒரே நாளில் திருமணம் நடைபெற்றது. மாணிக்கம் எம் ஜி. ஆர். நிறுவனத்தைச் சேர்ந்தவராம்.

சென்னை மாம்பலம் பாலாஜி திருமணமண்டபத்தில் நடைபெற்ற மேற்படி திருமண விழாவிற்கு எம். ஜி. ஆர். தலைமை தாங்கி நடாத்திவைத்தார்.

## 'அரசாங்கமே தடையாக உள்ளது'

கொழும்புத்துறை, வெள்ளி

'இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசாங்கமே முட்டுக்கட்டையாக உள்ளது. இலங்கையில் கனிப்பொருட்கள் இருக்கின்ற போதிலும் அரசாங்கம் அவற்றைப் பிரயோசனப்படுத்தாது வெளிநாட்டிலிருந்தே பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்கிறது. குறிப்பாக இல்மனைட், சுண்ணும்புக்கல், பெட்ரோலியம் முதலியன இங்கு உண்டு. பெட்ரோலியம்ஆராய்ச்சிகளின் மூலம் வடபகுதிகளில் அவை கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்த போதிலும் அரசாங்கம் அவற்றைவெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்கிறது. இலங்கையில்

## ஊர்வலத்தில் மோதல்:

## "கைதடிக் கிராமத்தில் வேலைவாய்ப்பு உண்டு"

கைதடி வெள்ளி

''மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதே ஆட்சிமன்ற உறுப்பினர்களின் பொறுப்பாகும். இப்பொறுப்பை உணர்பவர்களை பிரதிநிதியாகத் தெரிவுசெய்வது மக்கள் பொறுப்பு.''

கைதடியில் தமிழ்க்காங்கிரஸ் கிளையைத் திறந்து வைத்துப் பேசிய சாவகச்சேரி தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் திரு வே. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. குமாரசுவாமிமேலும் கூறியதாவது: 'பசி, பிணி இவைகளால் மக்கள் பீடிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டம்தான். கைதடிக் கிராமத்திலேயே நிறைய வேலைவாய்ப்பிருக்கின்றது. தொழிலாள மக்களை அதிகமாகக் கொண்டுள்ள இக்கிராமத்தில் போதிய அளவு கல் இருக்கிறது. இவர்கள் தொழிலுக்காக வெளியிற் செல்லவேண்டிய அவசியமேயில்லை. இக்கிராமத்திலேயே மக்கள் உழைக்கமுடியும். கல்லுகளைக் கிளப்பி எடுப்பதன்மூலம் விவசாயமும் பெருகும்.

நான் ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்த எட்டு ஆண்டுகளில் இத்தொகுதிக்கு பல கோடி ரூபாக்களை அபிவிருத்திக்காகஒதுக்கச்செய்து எனது தொகுதியை அபிவிருத்தி செய்தேன். கைத்தொழிற்சாலைகள், தொழில் நுட்பக்கல்லூரிகள் பண்ணைகள், வித்தியாலயங்கள், மின்சாரம், குளங்கள் நல்ல நீர் வசதிகள் முதலிய பலதேவைகளை எமது தொகுதி எதிர்பார்க்கின்றது''

## போராட்டத்தில் அடி, உதை வாங்குவதால் மானம் குறையாது'

வி. தர்மலிங்கம்

தாவடி, வெள்ளி

''ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்கள இழந்த உரிமைகளை பெறுவதற்கு ஆட்சிமன்றமும் போராட்டமும் அவசியம் நாம் ஆட்சிமன்றம் செல்வது தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப்பெறுவதற்கேயொழிய சுகபோக வாழ்வை அனுபவிக்க அல்ல.''

இவ்வாறு தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதியில் தேர்தல் பணிமனையொன்றினைத் திறந்துவைத்துப் பேசுகையில் முன்னாள் உடுவில் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

திரு. செ நவரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மேலும் திரு. தர்மலிங்கம் கூறியதாவது:

போராட்டத்தில் அடி, உதை வாங்குவதால் தமிழ் ... விலைகொடுத்து வாங்கிவிட முடியாது. தமிழரை ஒரு தேநீர்க் கோப்பையுடன் நம்மிடம் சேர்த்துக்கொள்ளலாம் என்று அன்று சேர் ஜோன் கொத்தலாவலை கூறினார். அன்றிருந்த தமிழ் கட்சியினரல்ல நாம். உண்மையான முழுமனதுடன் தமிழ்மக்களுடைய உரிமைகளுக்காகப் பாடுபட்டுவருகிறது தமிழரசுக்கட்சி.

''உடுவில் தொகுதியில் நான் இதுவரை செய்த சேவைகள் பல. முக்கியமாக 1969—70ம் ஆண்டு ஒரேயொரு தொலைபேசி வசதியை அரசாங்கம் அளித்தது. அதுவும் உடுவில் தொகுதியில் தாவடி உபதபால் கந்தோருக்கு மட்டுமே உடுவில் கிராமசபைத் தலைவராகவிருந்த காலத்தில் மக்களிடமிருந்து வரி யிறுக்காமல் அரசாங்கத்திடம் கடன்பெற்று மின்சாரவசதியமைத்துக் கொடுத்துள்ளேன்.''

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி படிப்படியாக தமிழுரிமைகளைப் பெற உழைப்போமென்றும் கூறினார்.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் திரு. செ. இராசதுரை உட்படப்பலர் உரையாற்றினர்.

## "தமிழரசின் சேவைபற்றி குழந்தையும் சொல்லும்"

# அற்பசலுகைகளுக்காக பதவியில் ஒட்டியிருந்தார்கள்

## தமிழரசாரை சாடுகிறார் வி. நவரத்தினம்

கோப்பாய், வெள்ளி

'தமிழ்மக்கள் நலன் கருதியே தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேறினேன். அவர்கள் தமிழ்மக்களைப் பாதிகும் பல சட்டங்கள், மசோதாக்களுக் கெல்லாம் ஆதரவளித்த நேரங்களில் நான் அவர்களுக்கு அவைகளினால்வரும் நன்மைதீமைகளை எடுத்துக்கூறியும் அவர்கள் அதனைக் கருத்திற் கொள்ளாது மக்களை தவறான பாதையில் இட்டுச் செல்கிறார்கள். இதனால் தமிழரசுக் கட்சி ஆரம்பித்த நோக்கங்கள், இலட்சியங்கள், கொள்கைகள் யாவும் காற்றில் பறக்கவிடப் பட்டன. எனவே மேலும் தமிழரசுக்கட்சியினரை மக்கள் உரிமைகளைப் பெற்றுத் தருவார்களென நம்பியிருப்பதில் அர்த்தமேமில்லை.

இவ்வாறு நேற்று முன் தினம் கோப்பாயில் நடைபெற்ற தமிழர் சுயாட்சிக் கழகத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் ஊர்காவற்றுறையின் முன்னாள் பிரதிநிதியும், கழகத் தலைவருமான திரு வ. நவரத்தினம் கூறினார்.

கோப்பாய் தொகுதியில் தமிழர் சுயாட்சிக்கழக வேட்பாளர் திரு. எஸ். கனகசுந்தரத்தை ஆதரித்து இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. துரைராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு நவரத்தினம் மேலும் பேசியதாவது:

58ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாவால் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி விசேஷ மசோதாவை அன்று என்னுடன் சேர்ந்து எதிர்த்தவர்கள் தமிழரசுக்கட்சியினர். ஆனால் அதே மசோதாவினை சில சட்ட விதிகளுடன் 66ல் தமிழரசுக்கட்சியினர் ஏற்றுக் கொண்டார்கள். அப்பொழுதும் நான் அதனை எதிர்த்தேன். தமிழரசுக் கட்சியினர் யூ. என். பி. அரசாங்கத்தில் மந்திரிப் பதவி ஏற்க ஆயத்தமான நேரம் நான் அவர்களுக்குப் புத்திமதி கூறினேன். மந்திரிப் பதவியை நாம் ஏற்றால் தமிழினத்துக்குச் சேவையாற்ற முடியாது, அது எமது கட்சியின் ஆரம்பக்கொள்கைக்கும் இலட்சியங்களுக்கும் முரண்பட்டதெனக் கூறினேன். அவர்கள் சம்மதிக்கவில்லை. பதவியை ஏற்றார்கள் ஒப்பந்தத்துடன் யூ. என். பி. க்கு ஆதரவளித்தார்கள். அந்த ஒப்பந்தத்தின் ஒரு சரத்தேனும் இதுவரை நிறைவேற்றப் படவில்லை. அற்ப சலுகைகளுக்காக அவர்களுடன் பதவியில் ஒட்டியிருந்தார்கள்.

நாலரை ஆண்டு காலம் அரசாங்கத்துடன் ஒட்டியிருந்தும் தமிழ் மக்களுரிமை யொன்றையும் பெற்றுத்தர முடியாதவர்கள்- ஏமாற்றப்பட்டவர்கள்- இனியும் ஆட்சிமன்றம் செல்வதில் அர்த்தமில்லை.

கோப்பாய் வேட்பாளர் திரு. கனகசுந்தரம், திரு. ஸ்ரீபதி, நல்லூர் தொகுதி வேட்பாளர் திரு. அ இரத்தினம், ஜெ. நாகேஸ்வரன் உட்படப்பலர் பேசினர்.

## கருணாநிதி கலைக்கல்லூரி கிரி திறந்து வைத்தார்

சென்னை, மே. 8

தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியின் பெயரில் உள்ள கல்லூரியை ஜனாதிபதி கிரி திறந்து வைத்தார் திருவண்ணாமலையில் அமைக்கப்பட்டுள்ள இக்கல்லூரிக்கு கலைஞர் கருணாநிதி கலைக்கல்லூரி எனப் பெயரிடப் பட்டுள்ளது.

இக்கல்லூரியை திறந்து வைக்க வேலூரிலிருந்து வந்த ஜனாதிபதி கிரி திருவண்ணாமலைக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார்.

இக்கல்லூரியில் காந்தி அடிகள், அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன், ஆகியோரின் படங்களை முறையே சபாநாயகர் கோவிந்தன், அமைச்சர் நெடுஞ்செழியன் மேற்சபைத் தலைவர் சி. பி. சிற்றரசு அமைச்சர் ப. உ. சண்முகம் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

## 11 வயது சிறுவன் தற்கொலை

முல்லைத்தீவு வெள்ளி

தந்தையின் வன்சொற் தாங்காத 11 வயது மகன் நச்சுத்திராவகமருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில் நடைபெற்றது.

தேவிபுரம் குடியேற்றத்தைச் சேர்ந்த மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் (வயது11) என்பவரின் மரணம் பற்றி முல்லைத்தீவு மரண விசாரணை அதிகாரி திரு. செ, தம்பையா விசாரணை நடாத்தினர். அப்போது மாடுகளைப்பிடித்துக் கட்டவில்லையெனத் தகப்பன் ஏசியதைத் தாங்காது பாலசுப்பிரமணியம் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும்அவரின் உயிரைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் வீணாகியதாகவும் கூறப்பட்டது.

பொலிஸ்சார்பில்திரு. எஸ் கந்தசாமிசாட்சிகளை ஆஜர் செய்தார். விசாரணைமுடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் வியட்காங்கியர் நடத்திவரும் தாக்குதல்களுக்கு மூலஸ்தானமாக விளங்கும் தலைமை ராணுவமுகமாக இருக்கலாம் என்பது பற்றி

ஆர்ப்பாட்டமொன்றில் 3 பேர் பலியாகியிருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன

## ஊர்வலத்தில் மோதல்: 7பேர்பலி; 100பேருக்குகாயம்

பம்பாய், மே 8

விக்கிரக ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் 7 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயமடைந்தனர்

நேற்று நடைபெற்ற சிவ விக்கிரக ஊர்வலத்தில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டனர். இவ்வூர்வலத்தில் காலிகள் கூட்டமொன்று கற்களைவீசியதன் காரணமாகப் பெரும் மோதல் ஏற்பட்டது.

இம்மோதலில் பல வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன. இக்கலவரத்தில் 7 பேர் மாண்டதுடன் 100 பேர் காயமுமடைந்தனர்.

இச்சம்பவம் பம்பாயிலிருந்து 40 கிலோ மீற்றர் தூரத்தில் நடைபெற்றது. இதில் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதி பொலிசார் 105 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

## துப்புத்துலக்குவதில் புதிய நுட்பம்

லண்டன், மே 8

குற்றம் புரிந்துவிட்டுத் தப்பியோடித் தலைமறைவாகத் திரியும் கொலைகாரர்கள், திருடர்களை வளைத்துப்பிடிப்பதற்குப் புதிய துப்பு முறையொன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள் நேரில் கண்ட சாட்சிகளின் கூற்றை அடிப்படையாக வைத்துத் தேடப்படும் நபரின் புகைப்படத்த அப்படியே தத்துரூபமாகச் சிருஷ்டிக்கும் நுட்பமான முறை இது. இதனைப் 'புகைப்பட அடையாள முறை' என்று அழைக்கிறார்கள்,

பிரிட்டிஷ் பொலிஸ் இலாகாவின் ஒத்துழைப்புடன் ஜோன்வடிங்டன் லிமிட்டட் எனப்படும் பிரபல பொறியியல் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இப் புகைப்பட முறையைக் கண்டுபிடித்துள்ளனர். முக அவயவங்களையும், சாயல்களையும் தனித்தனியே சித்தரித்துக்காட்டும் 510 புகைப்படத் துணுக்குகளைக் கொண்டுதான் 'ஒரு நபரின் உருவப்படம் தயாரிக்கப்படுகிறது. இதில் 81 ஜோடி விதம்விதமான கண்கள், 70 ரகமான மூக்குகள், 86 வெவ்வேறு வாய்கள் மற்றும நாடிகள், நெற்றிகள், தலைமயிர் அமைப்புகள், தாடிகள், மீசைகள் போன்றவை இப்புகைப்படத் துணுக்குகளில் அடங்கும். சாட்சியங்களின் வாக்குமூலத்தைக் கொண்டு தேடப்படும் நபரின் முகத்தின் அங்க அடையாளங்களைச் சித்தரிக்கும் துணுக்குகளை ஒவ்வொன்றாகப் பொருத்தி, இறுதியில் அம்மனிதனின் உருவத் தோற்றத்தை அப்படியே நிதர்சனமாகக் காட்டும் புகைப்படத்தை உருவாக்கி விடுகிறார்கள். பின்பு இந்தப் புகைப்படத்தைக் கொண்டு இரகசியப் பொலிசார் குற்றவாளிகளை இலகுவில் வலைபோட்டுப் பிடித்துவிடலாம். இந்த நவீன முறையைக் கையாண்டு பிரிட்டிஷ் இரகசியப் பொலிசார் அண்மையில் தென் இங்கிலாந்தில் தலைமறைவாகத் திரிந்த கொலைகாரன் ஒருவனைக் கண்டு பிடித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## புதிய நிர்வாகிகள்

தெல்லிப்பளை, வெள்ளி

தெல்லிப்பளை முற்போக்கு ஐக்கிய வாலிபர் கழகத்தின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு இ. வேலாயுதம் உபதலைவர் திரு ச. பரமேஸ்வரன், காரியதரிசி திரு நா. செல்வராசா, உப காரியதரிசி திரு க. நடேசு தனாதிகாரி திரு இராசையா உப தனாதிகாரி திரு இ. செல்லத்துரை போஷகர் திரு ச. கிருஷ்ணமூர்த்தி உப போஷகர் திரு ஏ. கந்தசாமி, பொறுப்பாளர் திரு க. விஜயரத்தினம். ஆலோசகர்கள் திருவாளர்கள். வேமுருகையா, கா. பாலசிங்கம், வீ. சின்னத்தம்பி, ஏ. சல்லையா.

இங்கு உண்டு. பெட்ரோலியம்ஆராய்ச்சிகளின் மூலம் வடபகுதிகளில் அவை கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்த போதிலும் அரசாங்கம் அவற்றைவெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்கிறது. இலங்கையில் பத்து சிமெந்துத் தொழிற்சாலைகள் நிறுவமுடியும்எனப் பல நிபுணர்கள் கூறிய போதிலும் அரசாங்கம் நான்கு மாத்திரமே நிறுவியுள்ளது. இதனால் போதிய சிமெந்து உற்பத்தி இல்லாமையினால் வெளிநாட்டில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது''

இவ்வாறு நல்லூர்த் தொகுதியில் தமிழர் சுயாட்சிக்கழக சார்பில் போட்டியிடும் திரு. அம்பலவாணர் இரத்தினம் அரியாலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''அரேபியா நாட்டை எடுத்துக்கொண்டால் அது ஒரு பாலைவனம். அங்கு உள்ள மக்கள் பெட்ரோலியம் உற்பத்தியினால் நல்ல பொருளாதார நிலைமையை அடைந்துள்ளனர். நன்னீர் இல்லாத போதிலும் உப்பு நீர் கொண்டு விவசாயம் செய்கின்றனர். இதனால் அந்தப் பாலைவனம் இன்று சோலைவனமாகக் காணப்படுகிறது. அதேபோல் எமது அரசாங்கம் தொழிற்சாலைகளை அமைத்தால் நாம் எமக்குத் தேவையான பொருட்களை உற்பத்திசெய்யலாம் ஆனால் அரசாங்கம் அதற்கு முட்டுக்கட்டையாக உள்ளது.''

— —

மன்னாரில்

## டைனமைற் மீன்பிடி அதிகரிக்கிறதாம்

முசலி, வெள்ளி

மன்னார் மாவட்டத்தில் 'சவுத்பார்' மூண்டாம்பிட்டி விடத்தல்தீவு ஆகிய பகுதிகளில் மீண்டும் டைனமைற் வைத்து மீன்பிடிப்பவர்களின் தொகை அதிகரித்து வருவதாக கணக்கிடப்படுகின்றது.

ஆழ்கடலில் டைனமைற் வைத்து மீன் பிடிப்பதால் சிறுவலை பாய்ச்சுவலை ஆகிய சிறு தொழில் செய்யும் தொழிலாளர்கள் மீனின்றிக் கஷ்டப்படுகின்றார்கள். டைனமைற்வைத்து மீன் பிடிப்பதால் மீன் விருத்தி குறைவுபடுகின்றதெனவும் சிறு தொழில் மீனவர்கள் முறையிடுகின்றனர்.

லிங்கம் கூறினார்.

திரு. செ நவரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மேலும் திரு. தர்மலிங்கம் கூறியதாவது:

போராட்டத்திலே அடி, உதை வாங்குவதால் தமிழ் மக்கள் மானமற்றவர்களாக மாட்டார்கள். உரிமைக்கான போராட்டத்தில் அரசாங்கத்தை எதிர்க்கும் போது அரசாங்கம் எம்மைத் தாக்குமேயானால் நாம் ஒருபோதும் ஒதுங்கி வாழக்கூடாது ஒதுங்கிப்பயந்துவாழ்ந்தால் தான்மானம் பறிபோகும் என்பதைத் தமிழ்மக்கள் சிந்தையில் கொள்ளவேண்டும்.

எவரும் தமிழினத்தை

## ''சட்டவிரோத குடியேற்றத்தை துவக்கினால்தான் தீர்க்கலாம்''

—ஆர் ஜி

தம்பதேனியா, வெள்ளி

சிங்களமகாஜனக்ஷபயவை நான் ஏன் அவசரமாக ஆரம்பித்தேன் எனத் திருமதி பண்டாரநாயக்கா கேட்கிறார் அவர் பள்ளி மாணவியாகவிருக்கும் காலத்திலேயே நான் தமிழர்களுக்கெதிரான இப்போராட்டத்தை ஆரம்பித்தேன் என்பதை அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.''

தம்பதேனியாவில் நடைபெற்ற தனது கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சிங்கள மகாஜன பக்ஷயகட்சித் தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ''திருமதி பண்டாரநாயக்காபள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது நான் சட்டசபை அங்கத்தவராக இருந்தேன். அப்பொழுதே அரசாங்கத்தை சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை சுட்டுக் கொல்லவேண்டுமென வற்புறுத்தினேன். அதையே தொடர்ந்தும் வற்புறுத்தி வருகிறேன். அன்று தொடக்கம் இன்றுவரை இதையே ஆட்சிக்குவரும் ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் கூறிவருகிறேன். இலங்கைபோன்று உலகில் எந்தவொரு நாட்டிலும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை நாட்டில் சுதந்திரமாக நுழையவிடுவதில்லை. இத்தகைய குடியேற்றத்தைத் துவக்கைப் பயன்படுத்தாமல் ஒரு பொழுதும்தடுக்கமுடியாது'' எனக் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் ஏ, ஜி. அமரசிங்கி, பி. பி. ஹெரத், ஏ. சி. குரஜாபதி ஆகியோருட்படப் பலர்உரையாற்றினர்.

தது. அதுவும் உடுவில் தொகுதியில் தாவடி உப

## ''தமிழரசின் சேவைபற்றி குழந்தையும் சொல்லும்''

— வி.என்.நவரத்தினம்

மட்டுவில், வெள்ளி

'சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு சிலாபம், நீர்கொழும்புப்பகுதிகளில்வாழ்ந்ததமிழர்கள்இன்று சிங்களம்பேசுபவர்களாக மாறிவிட்டார்கள். இந்த நிலைதான் எமது வடக்குகிழக்கில் ஏற்பட வேண்டுமா?' என மட்டுவில் தெற்கு கல்வத்தை சிவன் கோவிலடியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு.வி. என். நவரத்தினம் கேட்டார்.

திரு. எஸ். மகாலிங்கம்தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

'எமது வருங்கால தமிழ்ச் சந்ததியினர் மொழி உரிமை குடியுரிமை பெற்று இந்த நாட்டிலுள்ள ஏனைய இனத்துடன் சரிநிகர்சமானமாக தலைநிமிர்ந்து வாழ வேண்டும். இதற்காக அயராது உழைத்து வருவது தமிழரசுக்கட்சி ஒன்றுதான்.

அன்று தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றன. ஆனால் அதை எந்தவொரு தமிழ்அரசியல் கட்சியாவது தடுத்து நிறுத்தவில்லை. 1956ல் ஆட்சிமன்றம்சென்ற எமது கட்சி அதை எதிர்த்து குரல்எழுப்பியது. எமது கட்சியில் உள்ள தலைவர்கள்தான் எமது இன, மொழி, கலை, கலாச்சாரத்துக்காகப் போராடி. அடிவாங்கிஉதை வாங்கி சிறைசென்றனர்.

இதை உணர்ந்து தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக தமிழரசுக்கட்சியை ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும்.''

— —

தேர்தலன்று

## நோயாளிகள் தனியார் வாகனத்தை பயன்படுத்தலாம்

கோட்டை, வெள்ளி

தேர்தல். தினத்தன்று நடந்து சென்றோ அல்லது அரசாங்க வாகனங்களில் சென்றோ வாக்களிக்க வியலாது தனியார் வாகனங்களை பயன்படுத்த விரும்புபவர்கள் தேர்தல் தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே தங்கள் தொகுதி தேர்தல் அதிகாரிக்கு விண்ணப்பித்து அனுமதிபெற வேண்டும்.

இவர்கள் தாங்கள் அனுப்பும் விண்ணப்பத்தோடு வைத்தியரிடமிருந்து ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் வாங்கியிணைத்து அனுப்பவேண்டும்.

சௌக்கியப்பகுதி அதிபர் இத்தகைய வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களை அவ்வப்பகுதி வைத்திய அதிகாரிகள் மற்றும் அரசாங்க அங்கீகாரத்துடன் இயங்கும் வைத்திய நிலைய வைத்தியர்கள் ஆகியோர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார.

## அதிபர்கள் இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி காயித்திரி கணேசன் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி அதிபராகவும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஏ. சரவணமுத்து வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி அதிபராகவும் இடமாற்றம் பெற்றுள்ளனர். செல்வி சரவணமுத்து சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேல் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபராகக் கடமையாற்றியவரென்பது குறிப்பிடத்தக்கது.

—

## நீரில் மூழ்கி மரணம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு சிலாவத்தையைச்சேர்ந்த 9 பிள்ளைகளின் தந்தைநீரில்மூழ்கிப்பரிதாபமரணத்திற்குள்ளானர் தம்பையா அரசு என்ற 43 வயதான இவர் குளத்தில் குளித்துக்கொண்டிருக்கையில் நீரில் மூழ்கி மரணமானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவுமரணவிசாரணைஅதிகாரி திரு. செ. தம்பையா விசாரணை செய்தார், பொலிஸ் சார்பில் திரு. எஸ் கந்தசாமி சாட்சியங்களைப் பதிவு செய்தார்.

கோவிந்தன், அமைச்சர் நெடுஞ்செழியன் மேற்சபைத்தலைவர் சி.பி. சிற்றரசு அமைச்சர் ப.உ.சண்முகம் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

பொலிஸ்சார்பில்திரு. எஸ் கந்தசாமிசாட்சிகளை ஆஜர் செய்தார். விசாரணைமுடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி - 1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள மகாஜனக் கட்சி, இ. தி. க. மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**

**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

### 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''

### 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மலையளவு சொல்லைவிடக் கடுகளவு செயல் எவ்வளவோ சிறந்தது. —மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 26-ந் திகதி (9 - 5 - 70)

## மக்கள் சேவை

மக்கள் சேவையே மகேசுவரன் சேவை! இந்தச் சேவையைச் செய்வதற்காக நானூறுக்கும் அதிகமானவர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்துள்ளனர். இவர்கள் ஆட்சி மன்றத்திற்குப் போய் மக்களின் குறைகளை எடுத்துச் சொல்லி விவாதித்து ஆராய்ந்து அவற்றை நீக்கி மக்களுக்குச் சேவைசெய்யப் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றனர். 'வானத்தை வில்லாக வளைப்போம் மண்ணைக் கயிறாகத் திரிப்போம்' என்று அரசியல்வாதிகள் பேசினால் அது ஆச்சரியத்துக்குரிய விஷயமல்ல. வாரத்துக்கு இரண்டுகொத்து அரிசி கொடுப்பது முதல் விவசாயிகள், பாட்டாளிகள் ஆகியோரின் சகல குறைகளையும் தீர்ப்பதற்கு பெரிய பெரிய தலைவர்களும் பெரியபெரிய கட்சிகளும் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றனர். இதுவொன்றும் புதிதல்ல.

ஐந்து ஆண்டுகளுக்குஒரு தடவை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வீட்டுக்குவீடு செல்வதும் மேடைகளில் நின்று முழங்குவதும் தேர்தல் அறிக்கைகளை வெளியிடுவதும், வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும் சாதாரண விஷயம். இது கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் தெரியும்; வாக்காளர்களும் அறிவர்.

ரயிலுக்குச் செல்லும் பிரயாணியொருவர் உரிய நேரத்தில் ரயில் புறப்படுமா, உரிய நேரத்தில்அது போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருமா என்ற நம்பிக்கையுடன் செல்ல முடியுமா? எத்தனையோ பஸ்கள் வந்து இறங்குகின்றன; என்னென்னமோ சட்டங்கள் போடப்படுகின்றன. எம். பிக்கள் பலரின் சிபார்சுகளிலும் பலருக்கும் கண்டக்டர் வேலைமுதல் பஸ்களைக்கழுவும் வேலைவரை கிடைக்கின்றன. ஆனாலும் பஸ்ஸுக்காக மணிக்கணக்கில் பிரயாணிகள் தவம்கிடக்கும் நிலையை அன்றுடம்ஒவ்வொரு பஸ் நிலையங்களிலும் பஸ் தரிப்புக்களிலும் காணலாம். தொலைபேசிக்கு ஆண்டுதோறும் கட்டணம் செலுத்துவதுடன் உள்ளூர் அழைப்புக்களுக்கும் வெளியூர் அழைப்புக்களுக்கும் தனியாகக் கட்டணமும் செலுத்தப்படுகின்றது, ஆனாலும் அவசரத்துக்கு அழைப்புக் கிடைப்பதானால் அது குதிரைக்கொம்பு.

'கட்டணம் செலுத்துகிறோமே அவசரத்துக்கு ஓர் அழைப்புக் கிடைப்பதாக இல்லையே' என்று கேட்டால் அமைச்சர்களுக்கும் ஆட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கும் முதன்மை அழைப்புக்கள் பல இருக்கின்றன; அவை முடிந்தபின் தரலாம் என்பார்கள். மீண்டும் கேட்டால் 'லைன்ஸ் அவுட் ஒவ் ஓடர்' அதாவது தொலைபேசித் தொடர்புகள் பழுதடைந்து விட்டன என்று பதில் கிடைக்கும்.

தொலைபேசிதான் சரிவரவில்லையென்றால்தந்தி மூலம் தகவல் அனுப்பலாமென்று முயற்சி செய்தால் அது அவசரத் தந்தியானாலும் அதிக கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு மிக அமைதியாக ஆறுதலாக பத்துச்சத செலவுடன் அது தபாலில்போய்ச் சேரும்.

இந்தச் சேவைகளையெல்லாம் சீர்திருத்துவோம் என்று உறுதியளித்துச் செல்லும் மக்கள் பிரதிநிதிகள் இவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் உதவி அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் ஆகியோரை உலக நாடுகள் பலவற்றிலும் நடைபெறும் மகாநாடுகளுக்கு அனுப்பி வைப்பார்கள்;

அவர்களும் உலகம் சுற்றிய பின் இங்கு வந்து உங்கள் குறைகள் விரைவில் தீர்ந்து விடும் என்று கூறுவார்கள். யாருடைய குறைகள் தீருகின்றனவோ தெரியாது; மக்களின் குறைகள் தீரக்காணோம்.

இவற்றுக்கு என்ன வழி? மக்கள் கையில்தானுள்ளது மார்க்கம்.

# செக். - இலங்கை நல்லுறவு எல்லாத்துறைகளிலும் வளரவேண்டும்

## செக்கோஸ்லவாக்கிய தூதுவரின் ஆசை

**செக்கோஸ்லவாக்கியாவின் 25-வது விடுதலை தினத்தையொட்டி இலங்கையிலுள்ள செக்கோஸ்லவாக்கிய தூதுவர் திரு. பாவல் பாவ்லிக் விடுத்துள்ள செய்தியின் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது.**

செக்கோஸ்லவாக்கியா பாஸிஸ ஆக்கிரமிப்பிலிருந்து சோவியத் ரஷ்யாவின் படை உதவியால் விடுபட்டபின் கொண்டாடும் 25-வது ஆண்டு சுதந்திரதின விழாவாகும் இன்று.

கடந்த உலக யுத்தத்தின் போது பயங்கரமான தாக்குதல்களுக்கு உள்ளான செக்கோஸ்லவேக்கியாவின் தலைநகரான பிராக் கால்நூற்றுண்டுகளாகமே 9-ம் திகதியை சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகின்றது. அன்றைய தினம்தான் செக்கோஸ்லவாக்கியா ஐரோப்பாவின் மத்தியில் மீண்டும் ஆதிபத்திய உரிமையுள்ள சுதந்திர நாடாகப்பரிணமித்தது. அதன் காரணமாக மே 9-ம்திகதியை செகோஸ்லவேக்கியா தேசிய தினமாக கொண்டாடி வருகின்றது

இந்த வருடம் செக் மக்களும் சுலோவாக் மக்களும் கூட்டாக மகிழ்ச்சியுடன் சுதந்திர தினத்தை கொண்டாடுவார்கள்.

இட்லரின் சர்வாதிகார ஆட்சியை அனுபவித்த செக்கோஸ்லவாக்கியா மக்கள் கடந்தகால வரலாறு கற்பித்த பாடத்தின் காரணமாக தமது பாதுகாப்புக்கு சோவியத் ரஷ்யாவுடன் சார்ந்திருப்பது உகந்தது என்று உணர்ந்து அதனிடமே தமது எதிர்கால பாதுகாப்பை ஒப்படைக்க முடிவு செய்தார்கள்.

கடந்த 25 ஆண்டுகளில் செக்கோஸ்லவேக்கியா குறிப்பிடத்தக்க நிரந்தர வெற்றிகளை பெற்றுள்ளது. முதல் இரண்டரை வருடங்களும் நாட்டில் ஏற்பட்ட சேதங்களை சீர்திருத்துவதிலும், எதிர்கால உண்மையான அரசியலை அமைப்பதிலும் கழிந்தன. இப் போராட்டம் செக், சுலோவாக்கிய பிரதேசங்களில் சோஷலிஷ அமைப்புக்கு வழி அமைத்தது.

முன்னேறிய ஏனைய ஐரோப்பிய நாடுகள் அடைந்த பொருளாதார அபிவிருத்தி விகிதத்திற்கு இணைவாக செக்கோஸ்லவக்கியாவின் பொருளாதாரமும் வளர்ந்துள்ளது. உலகின் முன்னேறிய கைத்தொழில் நாடுகளுள் ஒன்றாக இது கணிக்கப்படுகின்றது

விஞ்ஞான ஆராய்ச்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தால் உழைக்கும் மக்கள் சமுதாயத்தின் ஆக்க சக்தியை ஒருமுகப்படுத்தியதின் மூலமும் திட்டங்களை அமுல் நடத்தியதின் மூலமும் சோஷலிஸ உற்பத்தி முறையை ஏற்படுத்தி எமது பொருளாதாரத்தை வளர்ப்பது சாத்தியமாகியுள்ளது.

உண்மையான சோஷலிஷத்தை கட்டி எழுப்ப தடையாக இருந்தவர்கள் செக்கோஸ்லவாக்கியா மக்கள் பொதுவுடமைக் கட்சித் தலைமையினால் நீக்கப்பட்டுவிட்டது. சிறிய அளவு தனியார் விவசாயம் மாற்றப்பட்டு சோஷலிஷ முறையில் பெரிய அளவில் அமைக்கப்பட்ட பண்ணைகள் உண்மையான அபிவிருத்திக்கு அடிப்படையாக விளங்குகின்றது.

பொருளாதார அபிவிருத்தி மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொடுத்திருக்கின்றது போருக்கு முந்திய காலப் பகுதியை விட 1968-ம் ஆண்டு தேசிய வருமானம் 3 1/2 மடங்கு அதிகரித்துள்ளது. மக்களுடைய நுகர்வு 3 மடங்கு பெருகி உள்ளது.

பூரண வேலைவாய்ப்புக்களையும் சமூக, சுகாதார பாதுகாப்பையும் செக்கோஸ்லவாக்கியா மக்களுக்கு ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றன. யுத்தத்திற்கு முன்னுள்ளதிலும் பார்க்க பொது மக்கள் மூன்று மடங்கு அதிகமாக உயர்தரக் கல்வியையும் மாணவர்கள் 5 மடங்கு அதிகமாக பல்கலைக்கழக கல்வியையும் பெற்றுள்ளார்கள்.

வெளிநாட்டு கொள்கையைப் பொறுத்த மட்டில் நட்புறவு நாடுகளுடனும் சோவியத் ரஷ்யாவுடனும் இணைந்து செயலாற்றுவதுடன் உலக நாடுகளுடன் கூட்டுறவாக நடந்து கொள்ளுகின்றது. ஏனைய உலக நாடுகளுடன் செக்கோஸ்லாவக்கியா நல்லுறவுடனும், சமாதானமாகவும் வாழ விரும்புகின்றது. ஐக்கிய நாடுட்ச் சபையின் நடவடிக்கைகளில் முக்கிய பங்கெடுத்து கொள்ளுகின்றது.

செக்கோஸ்லவாக்கியா ஆசிய மக்களின் போராட்டத்திற்கும், உலகத்தில் நடைபெறும் தேசிய சுதந்திரப் போரட்டங்களுக்கும் ஆதரவு கொடுப்பதுடன் பொருளாதார தொடர்பு நிலையிலும் உதவி செய்ய விரும்புகின்றது.

இதுவரையில் செக்கோஸ்லவாக்கிய உதவியுடன் இலங்கையில் பல முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

செக்கோஸ்லவாக்கியா இதயபூர்வமாக இலங்கையின் அபிவிருத்திக்கு நட்புறவுடன் உதவ விரும்புகின்றது. எமது இரு நாடுகளுக்குமான திருப்திகரமான தொடர்பு மேலும்அபிவிருத்தி அடைய வேண்டும். பல அபிவிருத்தித் திட்டங்கள் செக்கோஸ்லவாகிய உதவியுடன் இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இரு நாடுகளின் தொடர்புகளை மேலும் வளர்ப்பதின் மூலம் இரு நாடுகளும் நன்மை பெறவேண்டும்.

# இன்று புதன் - சூரிய கிரகணம்

சாதாரணமாகச் சூரிய கிரகணம் என்றால் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் ஒரே நேர் கோட்டில் வந்தடையும்போது ஒரு சிறிது நேரம் சூரியனின் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ சந்திரன் மறைப்பதைக் குறிக்கும். இதே போலப் பூமியிலும் பார்க்கச் சூரியனுக்கு மிக அண்மையிலிருக்கும் புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் சூரியனுக்கும் பூமிக்குமிடையே ஒரே நேர் கோட்டில் அமையும்போதும் சூரியனின் ஒரு பகுதியை இக்கிரகங்கள் மறைக்கின்றன. சந்திரன் உருவத்தில் சிறியதாயினும் பூமிக்கு மிகவும் சமீபத்தில் இருப்பதனால் சில சமயங்களில் சூரியனை முற்றும் மறைத்துப பூரண கிரகணத்தை உண்டாக்குகின்றது ஆனால் புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் பூமியிலிருந்து வெகு தூரத்திலிருப்பதால் சூரியனில் மிகவும் சிறிய ஒரு பகுதியையே இவை மறைக்கின்றன. உண்மையில் சூரிய வட்டத்தின் மேல் ஒரு சிறு புள்ளியாகவே கிரகம் தோன்றும்.

இன்று 9ந் திகதி சனிக்கிழமை புதன் என்னும் கிரகம் இவ்வாறு சூரியனைக் கிரகணிக்கிறது. இவ்வித புதன்—சூரிய கிரகணம் முறையே 13, 7, 10, 3 வருடங்களுக்கு ஒருமுறைதான் தோன்றுகிறது. இதற்கு முன்பு இக்கிரகணம் 1960 நவம்பர் 7ந் திகதியும், அதற்கு முன் 1953 நவம்பர் 14ந் திகதியும், 1940 நவம்பர் 11ந் திகதியும் தோன்றிற்று அடுத்த இக்கிரகணம் 1973 நவம்பர் 10ந் திகதியும் 1986 நவம்பர் 13ந் திகதியும் 1993 நவம்பர் 6ந் திகதியும் தோன்றும். எப்பொழுதும் இது மே அல்லது நவம்பர் மாதத்திலேயே தோன்றுவது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை 9-50 மணியளவில் சூரிய வட்டத்தின் ஒரு விளிம்பை இக்கிரகம் தொட ஆரம்பித்துப் பின் சிறிது சிறிதாக வட்டத்தின் குறுக்கே சென்று மாலை 5-41 மணியளவில் வட்டத்தின் மறு பக்கத்தில் சூரியனை விட்டு விலகுகிறது. இந்த இரு நேரங்களுக்குமிடையில் சூரியனை மிகவும் கூர்ந்து அவதானித்தால் அவ்வட்டத்தின் மேல் புதன் மிகவும் சிறிய ஒரு கரும் புள்ளியாகத் தோன்றும்.

சூரியனை வெறும் கண்ணால் பார்ப்பது கெடுதி விளைவிக்கக்கூடும். வேறு கண்ணாடி வில்லைகள், தொலைநோக்கி முதலியனவற்றால் பார்ப்பது கண் பார்வையை இழத்தல் போன்ற மிகவும் கொடிய விளைவுகளை உண்டாக்கும். பார்க்க விரும்புவோர் நன்றாகப் புகையூட்டிய அல்லது கருமை நிறமுடைய கண்ணாடியினூடாகவே பார்த்தல்வேண்டும்.

டபிள்யூ. எஸ். செந்தில்நாதன், பி ஏ., எவ் ஆர். எஸ்.
(வழக்கறிஞர்)

## ஆர். ஜி., பசநாயக்கா ...

[1 பக்கத் தொடர்ச்சி] செல்வநாயகம் மந்திரி பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் 1956-1965-ம் ஆண்டுகாலத்திற்குள் இலகுவில் பெற்றிருக்கலாம். மே 27-ம் திகதி பொதுத் தேர்தலில் 19 தொகுதிகளில் தமிழரசுப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவது நிச்சயம். சிங்கள மக்களின் ஒத்துழைப்புடன் தான் தமிழர் உரிமை பெறலாம் எனக்கூறும் திரு. பொன்னம்பலம் பதவி, சலுகை, வசதி போன்றன பெறவே முயற்சிக்கின்றார். 2500 ஆண்டுகாலமாக தன்மானத்துடன் வாழ்ந்து வரும் தமிழரின் உரிமைகளை 5,6 வருடகாலஒத்துழைப்பு எந்தவித உதவியும் நமக்கு வழங்கவில்லை. தமிழ் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை செலுத்தாத இவர், அரசியல் செல்வாக்குப்பெற பல்கலைக்கழகப் பிரச்னையை உபயோகிக்கின்றார்.''

32 வருடகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றிவரும் திரு. பொன்னம்பலம் மாவட்டசபை, பல்கலைக்கழகம் போன்ற முக்கிய பிரச்னைகளில் ஆர். ஜி சேனநாயக்கா பஸநாயக்கா போன்றோருடன் ஒரே மனப்பான்மையுடன் எதிர்ப்பு காட்டி தமிழரின் சில உரிமைகளை கிடைக்க தடைசெய்துள்ளார், சிங்

# யாழ். குடாநாட்டுக்கே பெருமைதரும் பண்டத்தரிப்பு மின்தறி நிலையம்

**பண்டத்தரிப்பு கோவிற்பற்று பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட மின்தறி நெசவாலை திறப்பு விழா இன்று மாலை நடைபெறுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இன்று பண்டத்தரிப்பில் ஒரு மின்தறி நெசவாலையின் திறப்புவிழா நடைபெறவிருக்கிறது. இந்தநெசவாலை பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சென்ற வருடம் சங்கானையில், வலிகாமம் மேற்குப் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஒரு மின்தறி நெசவாலை திறக்கப்பட்டது. இந்த இரண்டு நிலையங்களும் பொருளாதார விருத்திக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரின் பிபார்களிலும் பலருக்கும் கண்டக்டர் வேலைமுதல் பஸ்களைக்கழுவும் வேலைவரை கிடைக்கின்றன. ஆனாலும் பஸ்ஸுக்காக மணிக்கணக்கில் பிரயாணிகள் தவம்கிடக்...

...கள் திருகின்றனவோ தெரியாது; மக்களின் குறைகள் தீரக்காணோம்.

இவற்றுக்கு என்ன வழி? மக்கள் கையில்தானுள்ளது மார்க்கம்.

...லையின் திறப்புவிழா நடைபெறவிருக்கிறது. இந்தநெசவாலை பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஸ்தாபிக்கப்...

...கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஒரு மின்தறி நெசவாலை திறக்கப்பட்டது. இந்த இரண்டு சமாசங்களும் யாழ்ப்பாணத்தின் பொருளாதார விருத்திக்கு...

# இலங்கைத் தி. மு. க.வை தடைசெய்ய வேண்டும்

## இப்படிக் கூறுகிறது 'சன்' பத்திரிகை

பொதுத் தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் தோட்டப் பகுதிகளிலுள்ள தமிழர்களைத் தவறானவழியில் இட்டுச்செல்ல முயலும் நாம் தமிழர்' இயக்கம் இலங்கை திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் ஆகியவற்றின் செயல்கள் குறித்து பொலிசார் விழிப்புடன் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிகிறோம்.

இவ்வியக்கங்களால் பீதியடைந்த மக்கள் இவை சம்பந்தமாக எண்ணற்ற புகார்களை தெரிவித்துள்ளதோடு பதுகாப்பையும் கோரியுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவ்வாறிருந்தபொழுதும் நாடற்றவர்களான இந்த இயக்கத்தினரைக் காலங்கடத்தாது கைதுசெய்யாமல் அவர்களைச்சகித்துக்கொண்டு ஏன் அரசாங்கம் பொறுமையாகவிருக்கிறது?

இவ்வியக்கங்கள் குறித்துப் பொலிசார் துருவி ஆராய்ந்தாலும் அவர்கள் மேலும் நடவடிக்கைகள் எடுக்க இயலாமைக்குக் காரணம் 'தற்போதைய சூழ்நிலை' எனக் குறிப்பிடுகிறார்கள் என்று இரகசியப்பொலிஸ் இலாகாவினரே தெரிவித்துள்ளனர். பொலிசார் குறிப்பிடும் இந்தச் சூழ்நிலைகள் என்ன? இவைமக்களுக்கு ஏன் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.

தென்இந்திய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி இலங்கை தி. மு. க.வின் குழப்பமான செயல்களைக் கண்டித்துள்ளதோடு இவர்களை 'நரிகள்' எனவும் குறிப்பிட்டுள்ளார் இலங்கை தி. மு. க.வோடு இந்திய தி மு க.வுக்கு ஒருவித தொடர்புமில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். வன்முறைகளில் இறங்கும் இத்தகைய இயக்கங்களை அதாவது இலங்கைத் தி மு கவாகவிருந்தாலென்ன அல்லது 'சேகுவேரா'வாகவிருந்தாலென்ன எந்தவொரு சுதந்திரமடைந்த நாட்டாலும் சகித்துக்கொள்ளமுடியாதென்பது தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் கருத்தாகும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைத் தி மு. க. கூட்டம் இந்த அரசியல் இயக்கம் உள்நாட்டுப் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் என்பதைத்தெளிவாகக் காட்டியுள்ளது. அக்கூட்டத்தில் பங்குபற்றிய சில பேச்சாளர்களின் புரட்சிகரமான உரைகளை அறிந்திருந்தும் அரசாங்கம் ஒருவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை அந்தக்கூட்டத்தைத் திரும்பவும்ஞாபகத்துக்குக்கொண்டுவரின் இ. தி. மு. க.வின் காரியதரிசி ஆயுதப்புரட்சி, கொரிலாச் சண்டைகள் ஆகியன பற்றிக் குறிப்பிட்டதை யாவரும் அறிவர்.

தோட்டப்பகுதிகளிலுள்ள சில ஆட்சிமன்ற அங்கத்தவர்களும் உள்ளூராட்சிமன்றங்களும் தேசத்துக்குத் துரோகம்விளைவிக்கும் இந்த இயங்கங்களை ஒழிக்கவேண்டுமென தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டேயிருக்கின்றன

தற்போது தேர்தல் நடைபெறுவதைத் தடைசெய்வதற்கு இவ்வியக்கங்கள் இரகசியத்திட்டங்கள் தீட்டுவதாகக் கூறப்படுகின்றது எனவே அரசாங்கம் இத்தகைய குழப்பம் விளைவிப்பவர்களைக் கண்காணித்து கைதுசெய்யவேண்டும்.

பொலிசார் இத்தகைய குழப்பம் விளைவிப்பவர்கள் மேல் காலதாமதமின்றி தகுந்த நடவடிக்கை எடுக்க அவர்களுக்குத்தற்போதைய சட்டம் இடம்கொடுக்கிறது எந்த விதத்திலும் எமது ஜனநாயக நிறுவனம் பாதுகாக்கப்படவேண்டும்.

## நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், சனி

ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணியின் தலைவரும் முன்னாள் வவனியா எம் பியும், தற்போது காங்கேசன்துறைத் தொகுதியில் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணியின் சார்பில் போட்டியிடுபவருமான திரு. ஸி. சுந்தரலிங்கத்தின் பேட்டிக் கட்டுரை 'ஈழநாடு' நாளைய இதழில் வெளிவரும்.

## சைவ மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை சைவபரிபாலன சபையின் சைவமாநாடு இம்மாதம் 11, 12 13ந்திகதிகளில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். இம்மாநாட்டுக்கு தருமையாதீனத் தமிழ்ப் புலவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் தலைமை வகிப்பார்.

இம்மகாநாட்டின் முதல் நாளான 11 ந் திகதிதிங்கட்கிழமை தருமை யாதீனப் புலவர் திரு சி. அருணைவடிவேல்முதலியார் தலைமை வகிப்பார். அன்று வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஆராதனையும் கோயிலிலிருந்து ஊர்வலமும், பூசை, தமிழ் மறை ஓதல், வரவேற்புரை, வரவேற்புப்பா, தலைமைப் பேருரை, தேவாரபாராயணம் ஆகியனநடைபெறும்.

இரண்டாம் நாள் முருக இலக்கியம் பற்றி பண்டிதர் திரு. பொன்கிருஷ்ண பிள்ளை ஆகியோர் இலக்கியமும்சமய வாழ்க்கையும் பற்றி திரு. அ. பாலரூவாயன் எம். ஏ. உரையாற்றுவர்.

அன்றுமாலை, தேவார இன்பம் பற்றி பண்டிதர் செ. சிவப்பிரகாசம். தமிழ் ஞானசம்பந்தர் பற்றி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, ஞானம் ஈசன்பால் அன்பே என்பது பற்றி சித்தாந்த கலைமணி சி அருணைவடிவேல் முதலியார் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

தேவார மணி திரு. பி. ஏ எஸ். இராஜசேகரன் மாணவிகள் திருமுறை இசை விருந்தளிப்பார்.

மூன்றாம் நாள் சைவப் புலவர் மணிதிரு. த. குமாரசுவாமிப்பிள்ளையின் தலைமையில் திரு சி. அருணைவடிவேல் முதலியார் சிவம் பெருக்கும் பிள்ளையார் பற்றியும், திரு அ பாலரூவாயன் சேக்கிழார் தெய்வத் தமிழ் பற்றியும் பேசுவர்.

மாலை நிகழ்ச்சிகள் சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் ஜே. பி. யு எம். தலைமையில் நடைபெறும். பண்டிதர் மு. கந்தையா சைவநாற்பாதம் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் — வன்றொண்டரது வன்மையும் மென்மையும் பற்றிப் பேசுவார். சித்தாந்த சிரோமணி திரு. பு மயில்வாகனம் நன்றியுரை கூற, திருமுறைப் பண்ணிசைக் கச்சேரியை தமிழ் இசைமணி பி ஏ. எஸ். இராஜசேகரன் நிகழ்த்துவார்.

சைவப்புலவர் முதலிய தேர்வுகளில் சித்தியடைந்தவர்களுககு தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

## உற்சவம்

மட்டுவில், வெள்ளி

சரித்திரப் புகழ்பெற்றதும், குளக்கோட்டுமகாராசனால் வைத்துப் பூசிக்கப்பட்டதுமான விளைவேலிமருதடி வீரகத்தி விநாயகரின் வருடாந்த கொடியேற்ற உற்சவம் இம்மாதம் 11-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. பத்துநாட்கள் உற்சவம்நடைபெறும்.

**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட மின்தறி நெசவாலை திறப்பு விழா இன்று மாலை நடைபெறுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

...முன்மாதிரியான வழிகாட்டியிருக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் சாதிக்க முடியாதது ஒன்றுமேயில்லை எனலாம். கூட்டுறவுமூலம் மக்கள் ஒன்றுபட்டு நாட்டைப் பல துறைகளிலும் வளம்படுத்த முடியும் என்பதை நிலைநாட்டவே சங்கானை, பண்டத்தரிப்புச் சமாசங்கள் புதிய துறைகளில் துணிவுடன் இறங்கியுள்ளன.

பண்டத்தரிப்பு நெசவாலை ஒருதொழிற்சாலைக்கு வேண்டப்படும் சகல வசதிகளையும் கொண்டதாய், கண்டோர் வியக்கக்கூடிய முறையில் அமைந்த கட்டடங்கள், அலுவலகம், தொழிலாளர் இளைப்பாறும் அறைகள், போசனசாலை இன்னோரன்ன பல வசதிகளையும் உள்ளடக்கியதாய், ஜப்பான் தேசத்திலிருந்து இறக்குமதியாகிய 16 மின்தறிகளையும் இவற்றுடன் தொடர்புள்ள வேறு துணை இயந்திரங்களையும் உடையதாய், சிறந்த முறையில் இயங்கி வருவது பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மக்களுககு மாத்திரமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கே பெருமையைத் தருவதாயிருக்கின்றது பலவகைச் செயற்கைப் பட்டுத்துணிகளை மிகமிகக் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பை அளிப்பது மல்லாமல் ஏறக்குறைய 100 ஆண், பெண் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பையும் கொடுத்திருக்கின்றது.

### நம்மை நாம் நம்பவேண்டும்

கூட்டுறவுச் சங்கங்களிலும் சமாசங்களிலும் பணியாற்ற முன்வருபவர்கள் அனேகமாகப் பதவி, புகழ், பணம் இன்னும் வேறு சுகங்களையே விரும்பி வருபவர்களாயிருப்பதனால் அவற்றில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்று மக்கள் குறைகூறுகிறார்கள். எமது தற்காலச் சமுதாய நிலையில் பொது நலப்பணிக்குத் தம்மைஅர்ப்பணம் செய்ய முன்வருபவர்கள் சிலரினும் சிலரே. இந்நிலையில் ஒருநாடு முன்னேற்றமடைய முடியாது. எங்கள் தேவைகளுக்கெல்லாம் அரசாங்கத்தை நாடியிருத்தல் கூடாது. நாங்களே ஒன்றுசேர்ந்து ஏறக்குறைய எங்கள் தேவைகளெல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளலாம். மக்களுக்குள்ளே அளவுகடந்த ஆற்றலும் சக்தியும் மறைந்து கிடக்கின்றது.

தேர்தல்காலங்களிலே எங்களிடத்தில் பிறக்கும் அளவற்ற ஆர்வத்தையும், ஆற்றலையும் சுறுசுறுப்பையும் மனோதிடத்தையும் நோக்கும்போது, எவ்வளவு தூரத்துக்கு மக்கள் சேர்ந்து தொழிற்படக்கூடும் என்பது வெளிப் படையாகின்றது. இத்துணையார்வத்தில் பத்தில் ஒரு பாகத்தையாவது ஆக்கபூர்வமான பொதுப்பணியில் நாம் செயற்படுத்துவோமானால் எம்மால் முடியாதது ஒன்றுமிராது. பதவியில், பணத்தில், புகழில் ஒருவகை இன்பம் இருக்கலாம். அதனிலும் பன்மடங்கு இன்பமிருக்கின்றது சுயநலமற்ற பொதுப்பணியில், பொதுப் பணியில் ஈடுபட்டு அனுபவித்தவர்களுக்குத்தான் அதன் இன்பம் தெரியும். தனக்கென யாதும் பயன் கருதாது ஒருதொழிற்சாலையைக் கட்டியெழுப்பும் போதும், வறுமையில் வாடி வாழ்க்கையில் வெறுப்புற்றிருக்கும் இளஞ்சந்ததியினருக்கு அதில் வேலைவாய்ப்பளிக்குப்போதும், அவர்களின் அயரா முயற்சியினால் மக்களுக்குத் தேவையான பொருட்கள் மேன்மேலும் உற்பத்தியாவதைக் காணும்தோறும், மக்கள் விரும்பி வந்து அவற்றை வாங்கி மகிழும்போதும், படிப்படியாகத் தொழிற்சாலையின் சுற்றுடல் வளம்பெறக் காணுந்தோறும், அத்தொழிற்சாலை இயங்குவதற்கு மூலகாரணராக இருந்த சுயநலங்கருதாத் தொண்டர் அடையும் இன்பத்திற்கு எல்லையேயில்லை எனலாம்.

### தொழில்துறையில் வளர்வோம்

நாட்டுப்பற்றுள்ள பெருமக்கள், பொதுநலசேவையில் நாட்டமுள்ளவர்கள் ஒன்றுசேர்ந்து மக்களுக்குப் பணியாற்ற கூட்டுறவுச்சங்கங்கள் நல்லதோர்வாய்ப்பையளிக்கின்றன. இதுகாறும் இச்சங்கங்கள் உணவுப் பொருட்கள் விளைபொருட்கள் ஆகியவற்றை வாங்கி மக்களுக்கு விநியோகம்செய்வதிலேயே கவனம் செலுத்தி வந்தன. அவற்றின் நிர்வாகஅமைப்புகளும்விதிகளும் அவைகள் செய்துவரும் சேவைகளுக்குப் பொருத்தமாகவே அமைந்தன பொருளாதார விருத்திக்குரிய துறைகளிலே சங்கங்களும் சமாசங்களும் இறங்கத் தடையாயிருக்கும் நிர்வாக விதிகளை ஏற்ற முறையில் மாற்றி அமைத்துக்கொள்ளலாம். நிர்வாக சபைகளின் ஆற்றலும் அனுபவமுள்ளவர்களை நியமன அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம். கூட்டுறவுத் தத்துவத்தை நன்கு உணர்ந்தவர்களுள்ள நிர்வாகசபைகளைக் கொண்டசங்கங்களும் சமாசங்களும் சங்கானை, பண்டத்தரிப்புச் சமாசங்கள் காட்டிய வழியைப் பின்பற்றி தொழிற்துறைகளை விருத்தி செய்யமுன்வந்தால் நாடுவளம் பெறுமென்பதற்கு ஐயமேயில்லை.

**மு.வைரமுத்து**

...பொன்னம்பலம் பதவி, சலுகை, வசதி போன்றன பெறவே முயற்சிக்கின்றார். 2500 ஆண்டுகாலமாக தன்மானத்துடன் வாழ்ந்து வரும் தமிழரின் உரிமைகளை 5,6 வருடகாலஒத்துழைப்பு மூலம் பெற்றுக்கொள்ள முடியாது. சிங்கள மக்களின் மனப்பான்மையை மாற்ற நமது கட்சி தொடர்ந்து போராடிவரும்.

1956-ல் தனிச்சிங்கள மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து சத்தியாக்கிரகம் தமிழரசு நடாத்தியபோது தமிழ் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து திரு செல்வநாயகத்திற்கு ஆதரவு அளித்தனர். அந்நேரம் செல்வநாயகம் தமிழ்மொழி நிரந்தரமாக அழியாது பாதுகாக்கப்பட தமிழ்ப்பல்கலைக்கழகம் நிறுவுதல் அவசியம் என்ற கருத்தைக்கூறினார். தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கம் கட்சி சார்பின்றி பொதுவாக அமைய காரணகர்த்தாவாக திரு. செல்வநாயகமே இருந்தார், தமிழ்மக்கள்இந்நோக்கம் நிறைவேற நிதிஉதவி அளித்தபோது திரு. ஜி. ஜி. களில் ஆர். ஜி சேனநாயக்கா பஸநாயக்கா போன்றோருடன் ஒரே மனப்பான்மையுடன் எதிர்ப்பு காட்டி தமிழரின் சில உரிமைகளை கிடைக்க தடைசெய்துள்ளார், சிங்கள குடியேற்றம் தடுக்கப்படவும், தமிழர் ஒற்றுமை கருதியும்திருமலையில் பூரணத்துவ பல்கலைக்கழகத்தை நிறுவக்கோரினோம். டட்லியுடன் செய்திருந்த ஒப்பந்தம் மூலம் தமிழ்மொழிக்கு வட,கிழக்கு மாகாணங்ளில் சம அந்தஸ்து உரிமையை நிலைநாட்டியுள்ளோம்.''

### இந்துப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புறுத்தியவன் நான்.

அத்துடன் கடற்றொழில் செய்பவர்களுக்கு (ஆயுள் இன்சூரன்ஸ்) அதாவது காப்புறுதித்திட்டத்தை ஏற்படுத்தினேன்.

பல வேலையற்றவர்களுக்கு வேலைவசதி அளிக்கும்முகமாக இப்போது கொழும்பிற்கு வரும் கப்பல்களில் சிலவற்றை யாழ்ப்பாணத்திற்கும், காங்கேசன்துறைக்கும் அனுப்பச்செய்த பெருமை தமக்குத்தான் உண்டென்றும் கூறினார்.

### இன்றைய பலன்

**மேஷம்-** இல்லறம் சிறக்கும் கரும்புபோல் தித்திக்கும் செய்தி கிட்டும்.

**ரிஷிபம்:** பூமிப் பிணக்கில் சமரச முடிவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்கள் தவிர்க்கப்படும், பிள்ளைகளின் செல்வாக்கு பெருகும்.

**மிதுனம்:** அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழக வேண்டிய நிர்ப்பந்தம், ஏற்படலாம், சிலருக்கு நயனரோகமும் தென்படும்.

**கடகம்:** பணமுடை தீரும் பந்துக்களின் தொடர்புகள் பெருகும்.

**சிம்மம்** கருத்து வேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும், மௌனமும் தெய்வபக்தியும் நன்று.

**கன்னி:** வாகன சுகத்துடன் வாழ்க்கை நலன் வந்துசேரும் தன்மானம் தலைதூக்கும்.

**துலாம்:** மகிழ்ச்சிகரமான தினம் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள்.

**விருட்சிகம்:** ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும்; சிறு பிணிக்கும் இடமுண்டு பொறுமை நன்று.

**தனுசு:** இல்லத்தில் இனிமை மலரும் உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

**மகரம்-** கொடுக்கல்வாங்கல் மூலம் அபிப்பிராய மோதல் ஏற்படும். மௌனம் நன்மை தரும்

**கும்பம்:** தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். நினைத்ததை சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**மீனம்:** விந்தையில் வெற்றி காணும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ்வந்துசேரும்.

— சோதிடக்கலாநிதி —

**திருமலை க வேலுப்பிள்ளை**

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org